# தமிழன்



வெள்ளியங்காட்ட

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# தமிழன்

வெள்ளியங்காட்டான்

[illegible]
ஆவரம்பாளையம் சாலை, பீளமேடு அஞ்சல்
கோவை — 641004

விலை: ரூ: 5-00

குமணன் பதிப்பக வெளியீடு எண் 4
முதல் பதிப்பு: செ: 9-9-1979 — 550 பிரதிகள்
உரிமை: ஆசிரியர்க்கு

அச்சிட்டோர்: நாகராஜ் பிரிண்டர்ஸ், கோவை — 641015

# பதிப்புரை

நிலைபேறுடையதாக.........!
நுட்பமான தர்க்கங்களாக ........!
ஆழமான சிந்தனைகளாக.........!
தொய்வின்றி,
மரபுப் பசுவின் மடியிலிருந்து சுரந்த பால் .........

சர்க்கரைப் பந்தலில் தேன் மாரியாக.....
கற்போரின் இதயத்தைக் கவ்விப்
பரவசமூட்டும் அற்புதக் கருத்துக்களாக...........
கம்பீரமான சொல்லாட்சியுடன்.........
வாழ்வின், வரலாற்றுண்மைகளின் உயிர்த்துடிப்பான எண்ணங்கள்—

கலையழகு கொஞ்சக் கவிஞர் வடித்துள்ள பாத்திரங்கள்...
நம் சிந்தையை விட்டகலாத சிரஞ்சீவிச் சித்திரங்கள்......!

தேன் இனிப்பானது ஆனால் இக்காவியமே தெவிட்டாததாக.........

வானைத் தழுவும் வெண்ணிலவின் சோதி வெள்ளம் போல் ஒளிர்கிறது.

தமிழனின் தலையாய பண்பை,

தஞ்சமென் றொருவன் தாளில்
தாழாதான், தாழ்ந்தோர் தம்மை
வஞ்சமென் றெதுவும் செய்து
வருத்தாதான், வஞ்ச கர்பால்
பஞ்சமென் றிரந்து கஞ்சி
பருகாதான், பகுத்தா ராய்ந்த
நெஞ்சமென் னும்சான் றொன்றை
நீக்காதான் தமிழ' னென்பர்......'

என்ற கவிதையில் தான் என்ன கம்பீரம்......!
கற்பனைக்கும் பஞ்சமில்லை......
வேனில் காலத்தின் மனத்தை மயக்கும் தென்றல் மருத்துவி,

'குன்றினி லுதித்துக் கோலக்
குவளையில் கண்ணு றங்கி
ஒன்றுநந் நிலவி லூர்ந்தாங்
கொண்தளிர் மேல்த வழ்ந்து
முன்றிலில் கமழப் பூத்த
முல்லைப்பா லார்ந்த தென்றல்
மன்றினி லுலவக் கண்டு
மனமெலாம் மயங்கும் வேனில்.........

தமிழ் நலிவிற்கு ஒரு...... +
சமுதாயத் தேய்விற்கு ஒரு...... —
நாடு நாசமானதற்கு ஒரு...... ×
இக்குறிகள் அற்புதமான பாடலாக......

'அமுதாய தமிழின் தேய்வு
ஆரியம் கூட்ட லாலே
சமுதாயத் தேய்வு சார்ந்த
சமத்துவம் கழித்த லாலே
நமதாய நாட்டின் தேய்வு
நச்சுநூல் பெருக்க லாலே......'

நம் தாய்த்திரு நாட்டைப் படம் பிடித்துக் காட்டும் நிகரற்ற 'புறநானூறை'ப் 'பள்ளியில் பிள்ளைகட்குப் பாடமாய்க் கூட வைக்கார்'......! என்று மனம் வருந்தும் கவிஞர்,

'தரமான வாழ்வு காணத்
தனையர்க்குத் தமிழ்த்தாய் தந்த
வருமானம்; வணங்கி வாழார் வரலாறு',

என்று பாடிப் புறநானூறுக்குப் புகழாரம் சூட்டுகிறார்.

காலத்தை வென்று நிற்கும் வரலாற்றுக் கருவூலமான இந்நூலின் பாடல்களனைத்தும் பண்பாட்டின் வெளிப்பாடுகள். ஆம்! சிறுமைகளைப் பிளந்தெறிந்து பெருமைகளைப் பேணும் பேரிலக்கியமாக மலர்ந்துள்ளது.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் தலையாய கலாசாரக் காப்பகமான இந்நூல்.........!தமிழறிந்த பெருமக்கள் ஒவ்வொருவரது கரத்திலும் தவழட்டும்......

பதிப்பகத்தார்

# [illegible] தோற்றம்

'அடலருந் துப்பின் கெடலரும் பட்பை;
குரவே, தளவே, குருந்தே, முல்லையென்
றிந்நான் கல்லது பூவு மில்லை;
சிறுகொடிக் கொள்ளே, பொறிகிளர் வரையே,
கருங்கால் வரகே, யிருங்கதிர்த் திணையே
யிந்நான் கல்ல துணவு மில்லை;
பாணன், பறையன், கடம்பன், துடியனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
யொளிரேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது,
நெல்லுகுத்துப் பரவும் கடவுளு மிலவே.

—இதுதான் தொன்மைத் தமிழ்நாடு

—'செற்றாரை வழிதபுத்தனன்
நட்டாரை யுயர்புகூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தா னிரப்பறியலன்
இரந்தார்க்கு மறுப்பறியலன்'—

—இவன்தான் தன்மானத் தமிமன்

'தமர்தற் றப்பின் அதுநோன் றல்லும்
பிறர்கை யறவு தானு ணுதலும்
படைப்பழி தாரா மைந்தின ஞதலும்
வேந்துடை யவையத் தோங்குபு நடத்தலும்'—,

அகிம்சை, சகோதரத்துவம், சுதந்திரம், சமத்துவம் எனும் உலகு தழுவிய இந்நான்கு கொள்கைகள் உள்ளிட்ட

—இதுவே தமிழன் கொண்ட கோட்பாடு

'—அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், பிறரெனக் கோல்கோ டாது
நமரெனக் குணங்கொல் லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத்தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி இல்லோர் கையற,—

ஆம்! நாட்டில் ஏழையென ஒருவ னில்லாது வாழ்வாங்கு வாழ ஆள்வதே தன்மானத் தமிழனது பண்டைய அரசியல்நெறி!

—புறநானூறு புகட்டுவ திவை.

ஆக்கியோன்

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!'

—புறநானூறு

# தமிழன்

## 1 ஊருங் குடிகளுங்

அதுவொரு சிறிய ஊர்தான்;
ஆயினும், அருமை யான
நதியொரு புறத்தில்; நல்ல
நடுத்தரப் பள்ளி யொன்று
விதியுற விளங்கும் வீதி,
வீடுகள்! வெளியில் வேறு
நிதியுறும் வாழை, தென்னை,
நெல்,கரும் பள்ளும் நெஞ்சை!

சீரெலாம் சிறக்கச் சேர்ந்த
செழிப்பான சிறிய அந்த
ஊரெலாம் உயர்த்திப் பேச
உற்றவை ஒருநாள் கைந்து
நேரிலாக் குடிகள்! நீங்க
நின்றவை, நீரும், நீள
வேரிலாப் பயிரும் போன்று
வெறுமையால் வீணா னாரே!

திருவூரில் திளைத்து வாழும்
திருவாளர் திறனைத் தேரின்,
'தெருவோரம்' பூத்துக் காய்த்துத்
திகழ்ந்திடும் தேமா' வென்று
மருவாரும் மருவி வாழும்
மருதப்ப னொருவன்; மற்றும்
வருவாரை வழுத்தி வாழும்
வரதப்ப னொருவன் மட்டும்!

இருப்பவர்க் குள்ளே இங்கிவ்
விருவரும் ஏற்ற மன்றிக்
கரப்பிலா தளித்துக் காக்கும்
கலையிலோ, கணித்துக் கண்டு
பரப்பிடும் அறிவா ராய்ச்சிப்
பண்பிலோ, பாரில் மக்கள்
நிரப்பிலா நிலைக்குள் ளாக்கும்
நெறியிலோ நிறைந்தா ளன்றே.

மரமொன்று வாகை, மற்ற
மா,பலா மரங்க ளுக்காம்
உரமின்றி, உள்ள தெல்லாம்
உறிஞ்சிக்கொண் டுயர்வ தொப்பப்
பரிவின்றிப் பண்பா டின்றிப்
பகைமூட்டிப் பணிக்க ளைய்த்தான்
கரவொன்றக் காசு சேர்த்த
கனமய்ய னொருவ னுண்டே!

கணக்கனும் அவனே, ஊர்க்குள்
கனவானும் அவனே யானேன்,
பிணக்குகள் பெருக்க லொன்றே
பேரருள் செயலாய்ப் பெற்றான்!
'இணக்கமென் னும்சொல் லூரில்
இருந்ததே இல்லை' யென்ன
நுணுக்கமா 'யிவனே ஊர்க்கோர்
நோயெ'ன நுவலு மாறே.

''யாரைவிட் டாலும், ஊரில்
அகம்பாவி யான இந்த
மாரைவிட் டானின் பையன்
மருதனை மட்டும் தட்டி
ஊரைவிட் டோட்டா விட்டால்;
ஊணின்றி உறக்க மின்றிச்
சீரைவிட் டிறப்பேன் நானும்
சிந்தைநொந் தெ''ன்றான் சீமான்.

'சரி,தப்பெ'ன் றெதையும் செப்பிச்
சாராது, சரியோ தப்போ,—
ஒருதுப்பு மில்லா தூரில்
ஒதுங்கியே வாழ்ந்த தப்பு
மருதப்பன் செய்த தப்பு!
மாபெரும் இந்தத் தப்பு,
எரிதப்பி விழும்வைத் தூறாய்
எரித்ததிச் சீமான் நெஞ்சை!

'மூர்த்தியோ சிறிய தேனும்,
முறையாக முழக்கின் மூளும்
கீர்த்தியோ பெரிய' தென்னக்
கேட்டமாப் பிள்ளை 'கிட்டப்
பார்த்துவா' வென்றால், பாய்ந்து
பறித்து வந்திடுவோன், ''மாமா!
நேர்த்திதான்; இதனை நானே
நிறைவேற்றி வைப்பே'' னென்றான்.

மல்லிகை கமழ்ந்தால், அங்கே
மதிப்போர்யார் மருக்கொ ழுந்தை?
'நல்லவ னிருந்தால் இல்லை
நமக்கிங்கு பெருமை' யென்றே
வல்லவன் அவனை வாட்டி
வதைப்பதோர் வழக்காய்க் கர்ணம்,
'கல்லவன் அசையான்; காத்துக்
கண்டிதைச் செய்நீ' யென்றான்.

நஞ்சினுல் நெஞ்சும், தேனுல்
நாவையும் நயக்கப் பெற்ருேன்,
வஞ்சனை புரியத் தக்க
வகைக்கொரு வாய்ப்பைக் காண,
அஞ்சுவ தஞ்சி வாழும்
அப்பனின் வீட்டில் நாளும்
நெஞ்சுரம் மிஞ்சி வந்து
நிலையாகக் குந்த நேர்ந்தான்.

முகிலொத்துப் பொழிவான் சொல்லை;
முத்தமிழ் மோக மூட்டிப்
பகலொத்து விளக்கம் செய்வான்;
பரம்பொருள் படிவம் பற்றி
நகலொத்துப் பதிப்பான் நெஞ்சில்;
நகைச்சுவை உதிர்ப்பான்; நாடின்
'அகிலத்தில் அய்ய னைப்போல்
அறிந்தோர்யா ரப்பா?' வென்ன.

'பாலாறு பயிரில் பாயும்
பான்மையாய்ப் பகல்பா திக்கும்
மேலாறு வாரம் வாழ்வில்
மிகவும்நன்' றெனுமோர் நாளில்,
சேலேறித் துள்ளும் கால்வாய்ச்
சேரிவாழ் கிழவன் செங்கன்
கோலாற வூன்றிக் கும்பிக்
குறைதீர்க்க நின்ருன் வந்தே!

தமிழனுய்ப் பிறந்தும், வாழ்வில்
தாழ்ந்ததால் தாழ்த்தப் பட்டோன்,
அமிழ்ந்ததன் துயர வாரிக்
கமைந்தநற் கரையா யன்பு
கமழ்ந்திடும் அப்பன் வீட்டுக்
கடைநிற்கக் கண்ட அய்யன்
உமிழ்ந்தனன் காறித் 'தூரம்
ஒதுங்கடா நாயே', என்று.

உழவினைத் தொழிலாய்க் கொண்டவ்
வூராருக் குழைத்துத் தேய்ந்த
கிழவனை விடவும், கேட்டுக்
கிளர்ச்சியுற் றெழுந்து வந்தாள்,
'கொழுவினை யுருக்கிக் காதில்
கொட்டினு' னென்க்கு மைந்தே
இழிவினை எண்ணக் கூட
இயலாத இதயப் பாரராள்!

'ஏயெ'ன எதிர்த்துச் செங்கன்
எதுவொன்றும் இயம்பா முன்னே
தாயினும் பரிந்து நோக்கித்
''தடங்கண்டு வந்தாய் செங்கா!
பாயினும் பசுவை நேர்தல்
பாவமென் பதனை யோர்வாய்!
நீயினும் ஏன்நிற் கின்ருய்?
நிழலில்வந் துட்கார்'' என்ருள்.

அங்கையில் காய்ப்புக் காய்க்க,
அழகாக வரப்பைச் சீவிக்
குங்குமக் குழைச்சே றாகக்
குறைவற வுழுது நட்டுக்
கங்குலில் நீரைப் பாய்ச்சிக்
காத்துநெல் விளைத்துக் காய்ந்த
செங்கனின் புருவம் வில்லாய்ச்
சிவந்தன கண்ணும் அம்பாய்!

'அப்பனின் வீடொன் றன்றி
அயலிட மாயி ருந்திம்
முப்பது வருடத் திற்கும்
முன்னிதை மொழிந்தி ருந்தால்,
தப்பிடா துதட்டைச் சேர்த்துத்
தைத்துவிட் டிருப்பே' னென்று
செப்பினு னல்லன்; செங்கன்
சிந்தைதான் கொதித்த தெண்ணி!

மல்லிகா, —நோற்றுப் பெற்ற
மகள்குழல் மணக்கு மாறுய்க்
கொல்லையில் நட்டுக் கோலக்
கொழுந்தோடிப் படர வுள்ள
முல்லைக்குப் பந்தல் போட்டு
முடிந்ததும், முகம்ம லர்ந்து
மெல்லவந் தமர்ந்தா னப்பன்
மேனியைத் துடைத்த வாறே.

அழகிய பிரம்புச் சேரில்
அய்யனங் கமர்ந்தி ருந்தும்
ஒழுகிய கண்ணீர், உள்ளம்
கனன்றெரி உலையா யுள்ள
பழகிய கிழவன் றன்னைப்
பரிந்துபார்த் தன்பா ''யின்று
முழுகிய தென்ன? செங்கா!
முகம்வாட்ட முறலே'' னென்றான்.

''பல்வீழ்ந்து முளைத்த பிள்ளைப்
பருவத்தி லிருந்திவ் வூரில்
நெல்வீழ்ந்து கிடக்க நானும்
நிலத்தினி லுழைத்தேன்; நேராய்க்
கல்வீழ்ந்த தெனவே காதில்
கலங்கிட என்னைக் காய்ந்தோர்
சொல்வீழ்ந்த தில்லை! யின்றே,—
சொல்லநா சுருங்கிற்'' றென்றான்.

திங்களொத் திலங்கா நின்ற
திருமுகச் செவ்வி தீர்ந்து,
செங்கனின் செயலும் சொல்லும்
செல்வனுக் கேற்கா தேனும்.
'இங்கித மற்ற மாற்றம்
இயம்பிடி னின்னா' தென்னச்
சங்கையற் றுணர்ந்த பாராள்
சமயத்துக் கேற்பச் சொன்னாள்:

''பேசட்டும், பெரியோர் பெட்பைப்
பேணாத லறியார் வாயும்;
கூசட்டும், அவர்தம் கூற்றைக்
கூறுதற் குனது நாவும்!
தூசொட்டின் துணியால் தட்டித்
துடைத்திட்டால் சரிதான் செங்கா!
கோசிட்ட சாம்பார் தோசை
கொள்ளநீ குந்திங்'' கென்றே.

புவித்தல மனைத்தும் போற்றப்
புகழ்பூத்த தமிழ்பண் பாட்டைத்
தவித்தநெஞ் சுடனன் றய்யன்
தன்னிரு கண்முன் கண்டு
குவித்திடும் முகத்தைக் கூர்ந்து
குறிப்பாக நோக்கி அய்யன்,
கவித்தரம் பற்றிப் பேசக்
கம்பனை யிழுத்து வைத்தான்.

"'சேலுண்ட வொண்க ணரிற்
றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட' பாட்டைக் கேட்டு
மகிழ்வுண்டேன் நேற்று; மற்றிந்
நீலுண்ட நெடுவான் போர்த்த
நிலத்தினில் நிகராய் நிற்கும்
நாலுண்டோ? ஆகா! நுங்க
நோற்றவர் தமிழ ரன்றோ?

சேலம்மாங் கனியை மேல்தோல்
சீவியே சிறுதுண் டாக்கி,
ஏலம்,கற் கண்டு, தேன்,நெய்
இசைவறிந் தேற்கப் பெய்து,
கோலவெண் ணிலவு, தென்றல்,
கொடிமுல்லை மணமுங் கூட்டி
மாலுற மனைவி யூட்டும்
மகிழ்வினும் இனித்த'' தென்றே.

வழக்கத்தை விட்ட செங்கன்
வணங்காம லிருந்த தற்காய்
ஒழுக்கத்தை விட்ட அய்யன்,
'ஓ நாயே, என்றி கழ்ந்த
இழுக்கத்தை விட்டெ றிந்தாள்
இன்றிவ ளென்மீ' தென்று
பழக்கத்தை விட்டா னப்பன்
பாராட்டின் பண்போ ராதே!

இலைகாலி செய்தான் செங்கன்;
எல்லாமும் எடுத்து மூடி
உலைகாலி செய்தாள் பாராள்;
உள்ளதொன் றுரைத்து விட்டுக்
கலைகாலி செய்தா னப்பன்!
கனமய்யன் கடுத்துட் கார்ந்த
நிலைகாலி செய்தான், 'சற்று
நேரம்போய் வருவே' னென்றே.

# 3 கண்ணன் வருகை

கம்பனன் றருளில் தந்த
கற்பனை கமழ்பூந் தேனைத்
தும்பியொத் துறிஞ வந்த
துணைவியைக் கண்ட அப்பன்,
''கொம்பினை விட்டுக் கூவும்
குயில்பறந் திட்ட'' தென்ன,
''வம்புபோய் வாழ்வுற் றாங்கு
வருகிறான், தம்பி'' யென்றாள்.

வாய்மொழிக் கோசர் தங்கள்
வளர்புகழ் மரபில் வந்து,
தாய்மொழி தமிழைக் கற்றுத்
தனிப்பெருந் தகுதி வாய்த்துச்
சேய்மொழி யாங்கி லத்தில்
சிறப்புறத் தேர்ந்தோன்; சீராய்க்
காய்மொழி கடிந்து, காதில்
கனிமொழி உதிர்ப்பான், கண்ணன்.

மைத்துனன் வருகை கண்டு
மனம்நனி மகிழா அப்பன்,
''தைத்திடப் பேசும் வாய்க்குத்
தரமான தாட்பாள் வாங்கி
வைத்திருக் கின்றேன்: வா!வுன்
வரவுநல் வரவே'' யென்று
கைத்தவன் போல,— ஆனால்,
கலப்பொடும் 'கருடி' விட்டான்.

''அரும்பான மல்லி காஎன்
அகத்தளாய் மலரும் நாளில்,
'கரும்பாலை யாடிக் கையில்
காசுசேர்த் திருந்தும் அப்பா,
துரும்பாக மதித்தென் வாழ்க்கைத்
துணைவன்வாய்க் கெதற்குப் பாழும்
இரும்பாலே தாட்பா ளிட்டார்,'
எனஎண்ணி இகழ்வா'' ளென்றான்.

இங்கிதம் ததும்பு மிந்த
எழிலான மாற்றம் கேட்டுச்
செங்கனும் சிரித்தான்; செல்வி
சேர்ந்துடன் சிரித்தாள்; அப்பன்,
அங்கமும் குலுங்க, ''ஆகா!
அவ்விதம் அமைந்தால், நல்ல
தங்கத்தால் செய்து மாட்டத்
தவறேன்நா'' னெனச்சி ரித்தான்.

''கதிரதில் அனைத்தும் நெல்போல்
காணினும், களத்தில் தூற்றின்
பதரதில் பார்ப்ப தொப்பப்
பாங்கிலா அய்ய னின்றிங்
கெதிரினில் இருந்த இந்த
எளியோனை ஏதொன் றின்றி
அதிர'நா யெ'னவே வைதான்,
அகமெலாம் பதற'' என்றாள்.

''வெறுவாயே மென்று மென்று
விழுங்கிடும் தம்பிக் கின்று
முறிவாயே இல்லா நல்ல
முறுக்கிது கிடைத்தால், மூட
மறுவாயே இல்லை! கேட்டு
மறுகிட நேரு மென்ப
தறிவாயே பாரா! ஆயா
தளித்தாயே!'' என்று னப்பன்.

'பங்கயம் பதிந்த வண்டே
பார்க்குங்கண்' என்னப் பார்த்து,
''மங்குலும் மலரும்; மண்ணில்
மலர்களும் மலரும்; மற்றிச்
செங்கனைப் போன்றோர் மட்டும்
தேசத்தில் தேய்ந்தோ ராயின்,
எங்கிலும் அடுப்பில் பொங்க
எரிமட்டும் மலரா தக்கா!

'அமிழ்தினும் அரிய' தென்றிவ்
வுலகெலா மாய்ந்து போற்றும்
தமிழ்திரு நாட்டில் தோன்றித்
தமிழராய் வாழ்ந்தும், தம்பால்
கமழ்தரும் கல்வி, செல்வம்
காணுரைக் கடைய ராக்கி
உமிழ்ந்ததம் பலம்போ லெட்டா
தொதுக்கினு ருயர்ந்தோர்' ரென்பர்.

வலையரென் ரொதுக்கப் பட்டார்
வளநெய்தல் நிலத்தி னோர்கள்;
புலையரென் ரொதுக்கப் பட்டார்
புகழ்மரு தத்தி னோர்கள்;
மலையரென் ரொதுக்கப் பட்டார்
மல்குபூங் குறிஞ்சி மக்கள்;
கொலைஞரென் ரொதுக்கப் பட்டார்
கூர்ம்பரல் பாலை வாழ்நர்!

ஆரியர்க் ககத்தைத் தந்தோர்
ஆத்திக ரானார்; அல்லார்,
பூரியர், புலைய ரென்றே
பொறுப்பின்றி வெறுக்கப் பட்டுச்
சேரிய ரானார், செல்வம்
சேர்த்திட இயலா வாறிப்
பாரியல் தமிழர் வாழ்வு
பழங்கதை யாயிற் றின்று!

துடிக்கின்ற மீசை போச்சு;
துட்டரின் கன்னம் வீங்க
இடிக்கின்ற வீரம் போச்சின்
றில்லாதார்க் கிரங்கி வாரிக்
கொடுக்கின்ற ஈகை போச்சு;
குறிக்கோளாய்ப் புறநா னூறு
படிக்கின்ற பழக்கம் போச்சு;
பண்பாடும் பாழாய்ப் போச்சு!

'ஊழினும் உறலொன் றில்லை
உலகி'லென் றுருவை யேற்றுக்
கூனையும் குடிக்கக் கூடாக்
கூலிக்கா யுழைத்துத் தேயும்
ஏழைக ளிடுப்பி லேறி
இருக்கிறோம் நாமும்!— ஏற்றத்
தாழும்நம் தலைமேல் தங்கித்
தழைக்கிறார் தாழா'' ரென்றே,

சுந்தர முகமும், கண்ணில்
சுடர்கின்ற ஒளியுங் கூட்டிச்
'செந்தினை மாவில் கன்னம்,
செவி,பிற செய்து சிற்பி,
'தந்தனன் உயிரை' யென்னத்
தவழ்ந்துதன் அருகில் வந்த
கந்தனை யேந்தி முத்தம்
கன்னத்தில் வைத்த கண்ணன்,

பசியொரு பக்கம்; பார்ப்பான்
பரிவின்றிப் பகர்ந்த சொல்லின்
இசியொரு பக்க மென்ன
இதயந்தொய் வெய்தி இன்று,
'சுசியொரு பக்கம், சோற்றுச்
சுமையொரு பக்கம், சோர்ந்து
வசியுற நிற்பாள் நீலா
வழக்கம்போ' லெனவே சென்றான்

## 4 நீலாவின் நிலைமாறு



'பெற்றோரைப் பெரிது மொத்தே
பிள்ளையும் பிறக்கு' மென்னும்
கற்றோர்தம் கருத்தை மாற்றக்
கண்ணெதிர் காட்சி யாகி,
'உற்றோராக் காக்கைக் கூட்டில்
உதித்ததோர் குயிலிஃ' தென்ன,
மற்றோரும் மதிக்கும் மாதாய்
மதிநல முற்றாள் நீலா!

காற்றிலே இருந்து வந்து
கமழ்கின்ற மணமோ? காணச்
சேற்றிலே இருந்து வந்த
செவ்வல்லி மலரோ? சென்ற
நேற்றிலே இருந்து வந்து
நேர்ந்தநந் நாளோ,— நீலா!
ஊற்றிலே இருந்து னும்நீ
ரொப்பதோ ருளமு முற்றாள்.

கற்றநம் கண்ணன், கல்விக்
கழகமொன் றமைத்துக் கற்க
வுற்றவர்க் குளத்தி லோயா
தொளியூட்டு கின்றா னென்றே,
பெற்றதன் பெண்ணுக் கேற்ற
பெண்துணை பேணச் சேர்த்தங்
கொற்றறி நிமித்தம் அய்யன்,
ஊக்குவித் தனுப்ப லுற்றான்.

கண்ணனின் கவினைக் கண்டாள்;
கடைபோகக் கற்று ராய்ந்து,
'தண்ணுமை தாழ்ந்த' தென்னத்
தமிழ்முழங் கினிமை கண்டாள்;
திண்ணிய வொழுக்கங் கண்டாள்;
தெளிவுசெய் திறனைக் கண்டாள்;
மண்ணில்நன் மலரின் மாண்பே
மனிதனில் மணக்கக் கண்டாள்.

இளங்கெண்டை யிரண்டு கொண்ட
எழில்மதி முகத்தீர்ங் கண்ணாள்,
வளங்கொண்ட வாழ்வு கண்டு
வளர்ந்தவ ளெனினும், 'வாய்மை
களங்கொண்ட கண்ண னின்றிக்
கடைத்தேற லரிது கா'ணென்
றுளங்கொண்டா 'ளிவனே யென்றன்
உடலுயிர்க் குரியோ' னென்றே.

மதிவரக் காத்து நின்ற
மலையெனல் மாண்போ? மல்கி
நதிவரக் காத்து நின்ற
நன்செயே எனல்நன் றேயோ?
நிதிவரக் காத்து நின்ற
நிரப்பெனல் நிறைவோ?— நீலா
கதவரு காக நின்று
கண்ணனைக் காணக் காத்தாள்.

மாணவி ஆசா னென்னும்
மாண்பினை மறவா மங்கை,
ஆணிவே ராகக் காதல்,
அன்பருந் தருவாய், ஆர்வம்
பேணவே பூத்துக் காய்த்துப்
பெண்மையாய்க் கனிந்து நின்று
காணவே, வந்தான் கண்ணன்,
கடும்பசிக் கமிழ்தாய்க் கண்டே!

'மருவுண்ட மதுவை யுண்டு
மகிழ்ச்சியால் மயங்கி வந்த
கருவண்டு, கமலப் போதாம்
கன்னியின் முகத்தைக் கண்டு,
பிரிவுண்டு போகா மற்றுன்
பிணைப்புண்ட' தென்னுங் கண்ணாள்,
வரவுண்ட கண்ண னுண்ணும்
வகையுண்டு பண்ணி வைத்தாள்.

''கொல்லைமாந் தளிரைக் கோதும்
குயிலிசை பருகி யுள்ளேன்;
முல்லையின் மணத்தைத் தென்றல்
முகந்தீய அருந்தி யுள்ளேன்;
நல்லியற் கவிதை நாடி
நயம்நுகர்ந் துள்ளேன்; ஆனால்,
மெல்லி! நீ யிடுஞ்சோ றன்றோ
மிக்கது சுவையி'' லென்றான்.

''அகம்மிக அஞ்சத் தக்க
அடவியில், அமைதி மேவச்
சுகம்மிக நடக்கும் பாதை
சுயமாகக் காட்டும் நீங்கள்
யுகம்மிகு தலைவர்; என்கை
உணவினை யுண்டு வந்து
முகம்மலர் வெய்தின், அஃதென்
முன்செய்த தவமே போலும்!

கோமானே! கோலக் குன்றில்
கொடும்புலி கொன்று தின்ற
ஆமாவின் கன்றுக் குத்தன்
அருமைக்கன் றருந்தும் பாலைப்
பூமேவு புதர்க்கண் போந்து
புகட்டிய பசுவைப் போற்றும்
பாமேவு சுவைக்கிச் சோற்றின்
பல்சுவை யொவ்வா'' தென்றாள்.

செங்கதிர் பூத்துக் காலை
செய்கையில், சிறுமை தீர்ந்த
பங்கயத் தண்தே னார்ந்து
பாண்வண்டு பாடிற் றேபோ!
கொங்குநந் நாட்டிற் பூத்த
குறிஞ்சிதான் கொட்டிற் றோதேன்!
இங்குநான் இனிய இச்சொல்
எதிர்பார்த்தி ராத தென்றே.

முகத்திலே ஒளிரும் கண்கள்;
மொழியிலே முகிழ்க்கும் வாய்மை;
சுகத்திலே சொக்கிச் சோராச்
சுதந்திரக் கட்டுப் பாடு;
நுகத்திலே பகல்போல் காணும்
நுண்ணிய நூலா ராய்ச்சி;
அகத்திலே ஆர்வம் பூத்த
அணங்கினை ஆய்ந்தான், கண்ணன்.

மின்னொளி மேனி யாய்க்கார்
மேக்கும் குழலாய் மேவப்
பொன்னவிர் குவளை பூத்துப்
பொலிமதி முகமாய்ப் 'பூவில்
அன்னமே' யென்னக் கண்முன்
அழகொருங் கிணைந்து, பெண்மை
புன்னகை புரியும் போக்கில்
புதுப்பொருள் பொருந்திற் றன்றே.

பிறப்பினில் ஆண்மை பெண்மை
பேரெழில் பருவ மெய்தின்,
சிறப்பினில் சேர்ந்து வாழச்
சிந்தனை முந்தும் போலும்!
பொறுப்பினில் பொலியும் நீலா
புன்னகை புரிந்த இந்தக்
குறிப்பினில், இதுவொன் றன்றிக்
கூற்றவே றிலையென் றோர்ந்தான்.

கற்றிடுங் கல்வி யொன்றிக்
கவினொடு கருத்து மொன்றி,
உற்றிடும் இன்ப துன்பத்
துதவியொத் தாசை யொன்றிப்
பற்றிடும் பழக்கம், பாங்கு,
பண்பாடு, — பலவு மொன்றி
முற்றிடும் பொழுது காதல்
முளைவிடும் போலு மம்மா!

கடிந்துகொள் வதற்கும் காட்டும்
காரணம் காணேன்; கண்முன்
படிந்துகொண் டிருக்கு மென்றன்
பாழ்மனை யிருளைப் போக்க
முடிந்திடின் முயல்வே னென்று
முனைபவ ளாயின், 'நீலா
விடிந்தது பொழுது; வேண்டாம்
விளக்கெ'ன விளம்பே னென்றே,

''பிறப்பினில் உயர்வு தாழ்வுப்
பிரிவுகள் பெயரா முன்னே,
வெறுப்பிலா அறிவா ராய்ச்சி
விடியலாய் விரியா முன்னே,
புறப்பொரு ளனைத்தும் மக்கள்
பொதுப்பொரு ளாகா முன்னே;
மறப்பிலாக் காதல் பூத்தால்
மணக்காது மலரே!'' என்றான்.

''நாடொறுங் கிருந்து துய்க்க;
நவையற வுழுது வித்திக்
காடொறுங் கமைந்து, காணக்
கவினுற முளைத்து யர்ந்து,
தேடருஞ் செல்வ மென்னத்
திகழ்ந்திடும் பயிர்தான் தீய்ந்து
வாடிடும் பொழுது, 'வேண்டாம்
வான்றுளி' யென்னு'' தென்றாள்.

வானவ ரரக்க ரென்போர்
வாழ்முறை வரலா றெல்லாம்
தேனிவர் தமிழில் செப்பத்
தெவிட்டாது கேட்ட அப்பன்,
கானவர் காணும் முன்பே
கதைமூடி வைத்தன் றய்யன்
போனவன் போனா னாகப்
பொழுதுபோ காதி ருந்தான்.

ஊராய்ந்து கொள்ளா மென்றே
உள்ளூற நம்பி, யூன்றி
ஆராய்ந்து சொன்ன சொற்கள்
அவமாக லாயிற் றேனும்,
சீராய்ந்து சென்றான் தம்பி
சிணுங்காம லெனவே, கண்ணில்
நீராய்ந்து சோரப் பாராள்
நிலையாய்ந்து நெகிழ்ந்தாள், நெஞ்சம்!

கம்பத்தைச் சார்ந்து, காதல்
கணவனைக் கடைக்க ணித்து,
“தம்பியின் சொற்கள் தாழ்ந்த
தமிழர்தம் வரலா றாயின்,
நம்பிய எளியோர் வாழ்வை
நலிந்திடச் செய்த நாமே
அம்புவி தனிலே நேர்மை
அழித்தவ ரானோ மன்றோ?

நிந்திக்க நேர்ந்த இந்த
நெறிமுறை நினைவில் வைத்துச்
சிந்திக்க வேண்டும்; காலம்
சென்றஎம் செல்வத் தந்தை,
முந்திக்கைத் தீர்த்தம் வாங்கும்
முறைக்கென வழக்கில் மாட்டிப்
பந்தித்தெம் பாக்குத் தோப்பை
பறித்துக்கொண் டவனிப் பாவி!

நாலாறு தலைமு றைக்கும்
நலந்தரு முடைமை; நச்சு
வேலாகி நினைவில் நின்று
வேதனை மூட்டு தின்றும்!
தோலாகி எலும்பு மாகித்
துயருற எனது தம்பி,
மேலான மகள்நீ லாவின்
மேலதை யெழுதி வைத்தான்.

'பாசமாய்ப் பரிவாய்ப் பேசிப்
பலகாரச் சுவையை யூட்டி,
நேசனென் றெண்ணப் பண்ணி
நெஞ்சிலே வஞ்சம் வைத்து
மோசடி முழுதும் செய்தே
முன்னுக்கு வந்த கர்ணம்
நாசமாய்ப் போக!' வென்றே
நாடெலா மேசு'' தென்றாள்.

,,போதுமுன் பொக்க ணத்தைப்
புதிதாக்கி யவிழ்க்கா தே! இச்
சேதிநம் மணியய் யன்றன்
செவியிலே விழுந்நால், சேரப்
பாதத்தை யெடுத்தின் வீட்டுப்
படிதாண்டி வைக்கார், பாரா!
சீதையின் கதையும் நம்மால்
செவிமடுக் காமல் போகும்!

நூல்நுழை வுற்று ராய்ந்து
நுவல்வதை நோலோ மாயின்,
கோல்கொளத் தவறி விட்ட
கோனாரின் ஆடும் மாடும்,
கால்களால் மிதித்துக் காக்கும்
காடுபாழ்ப் படுத்தல் போல், நம்
பால்பழி படியத் தர்மம்
பாழ்பட நேரும் பாரில்!

கம்பனைப் புரிந்து கொண்டு
கதைகேட்கின் ருய்நீ யென்று
நம்பினேன் நானும்! நீயும்,
நரிக்குட்டி தன்வால் நாட்டி
உம்பர்கள் கடைந்த நல்ல
உவரியை அளந்த தொத்துன்
தம்பியைத் தலையில் தாங்கித்
தறிகெட்டுத் தவற்றைக் கண்டாய்!

'கண்மலி வள்ளத் துள்ளே
களிக்கும்தன் முகத்தைக் கண்டு,
விண்மதி மதுவி ஞைசை
வீழ்ந்ததென் ஞெருத்தி யுன்னி,
உண்மகிழ் துணைவ ஞேடும்
ஊடுநாள் வெம்மை நீங்கித்
தண்மதி யாகில், யானும்
தருவனிந் நறவெ'ன் ருளாம்!

அரியஇச் சித்தி ரத்தை
அருந்தமிழ் மொழியில் வைத்தோன்
பெரியவன்! இருந்தா லின்று,
'பேணுமென் கமுகந் தோப்புக்
குரியவன் இனிநீ' யென்றே
உதவலாம் உவந்து பாரா!
சரியெனச் சலனம் விட்டுச்
சதி,—யெனைச் சார்ந்தி'' ரென்ருன்.

இங்கித மின்றிப் பேசி
இயல்பழிந் திதய மேங்கி,
அங்கிருந் தெழுந்து வந்த
ஆற்றல்சா லய்யன் குந்திக்
கங்குலும் பகலுங் கன்றிக்
கவலையி லாழ்ந்தான், 'கல்லாச்
செங்கனின் வரவால் எல்லாம்
சீர்கெட்டு விட்ட' தென்றே.

தொந்திர வொன்று தோன்றித்
தொடருங்கால், துணையா கின்ற
தந்திரச் சரக்குப் பையாய்த்
தமதுநல் வாழ்வின் மூல
மந்திர மாயத் திற்கு
மறைப்பேழை யாகி மல்கும்
சிந்தனைத் திறனால், செய்யும்
செயலினைத் தேர்ந்தான் சீராய்!

அம்புக்குத் தப்பிச் சென்ற
அருமைமா னதனை யன்றே
'பம்பிக்குத் தீட்டி யாலே
படுத்தன்றிப் படுக்கே' னென்னும்
வெம்பிக்கண் ணிமையா வெற்றி
வேடனீ டார்கா னென்னா,
நம்பிக்கை யுடனே நாடி
நடைமுறை வகுத்தான் நன்றாய்!

வட்டின்றி யாடுஞ் சூதில்
வரதப்பன் வாதி யாயின்,
கட்டின்றிக் கவலை யின்றிக்
கழனியில் கரும்பை நட்டு
மட்டின்றிப் பணத்தைச் சேர்க்கும்
மருதப்பன் வழக்கில் மாட்டப்
பட்டொன்ற முடிப்பான் பாங்காய்ப்
பகையெனும் பெயரில் லாதே!

கரிதப்பி விழுந்தால், மற்ருேர்
கரியினுல் கடிதில் பற்றி
எருதொப்பப் பணியச் செய்தே
ஏவல்மேற் கொள்வ தொப்ப,
மருதப்பன் மாண்பைக் கொய்து
மண்ணிலே போட்டுத் தேய்க்க
ஒருதுப்பு வேண்டு மன்ருே
உலகத்தை ஊமை யாக்க!

வஞ்சகர் தம்மை யாரும்,
'வாருங்கள் வீட்டுக் கெ'ன்று
கெஞ்சவே வேண்டாம்; கிட்டக்
கேளிர்போல், கிளைஞ ரேபோல்,
அஞ்சிய அடியார் கள்போல்
அவர்களாய் வந்து சேர்வர்!
கொஞ்சநாள் கழிந்தால் வைப்பர்,
குரல்வளை தனில்தம் கையை!

வரப்போகப் பழகி, வந்து
வரதப்பன் வீட்டில் அய்யன்
இருப்பாக இருந்தான்; ஏற்ப
இதிகாசம் பருகச் செய்தான்.
உரப்பாக உலக வம்பும்
ஊர்வம்பும் அளந்தான்; ஊடே
சிரிப்பாகப் பேசிக் கேட்போர்
சிந்தையும் கவர்ந்தான், சேர!

"இலையில்லை, எங்கும் வாழை
இலைக்குமேல்! இறும்பூ தெய்த
மலையில்லை, மதிக்கும் மேரு
மலைக்குமேல்! மாண்பு மிக்க
கலையில்லை கம்பன் கண்ட
கலைக்குமேல்! கடைப்பி டிக்கும்
நிலையில்லை தெய்வ பக்தி
நிலைக்குமேல் நீணி லத்தே!

தேக்ககில், தேவ தர்ரு,
தித்திக்கும் மா,ப லாவாய்ப்
பூக்குலம் கமழும் பொங்கர்;
புள்மயில், குயில்,பு ருக்கள்;
மாக்களில் பன்றி, புள்ளி
மான்,முயல், மலேய ணில்கள்;
ஆக்கிய சுனே,நீ ரோடை
அழககம்! அருமைக் காட்சி!

வனமெனும் பெயரில், வாழ்வின்
வளமெலாம் வாய்த்த அங்கே,
மனமெனும் அதுவொன் றில்லா
மாதுதா டகை,தன் மக்கள்,
இனமெனும் சிலரோ டின்புற்
றிருந்தனள், இதயத் திற்குள்
சினமெனும் இதுவே தங்கள்
செயல்மூல தன்மாய்ச் சேர்த்தே!

புடலங்காய் போலப் பொன்ஞல்
பொருத்தமாய் வடத்தைப் பூண்டு,
கடகங்கள் வாழைத் தண்டின்
கனம்கையில் தொட்டுக் காதில்
குடமிளா காய்ப்ப மும்போல்
குருதிக்கல் கம்மல் மாட்டித்
திடலெனும் மூக்கில் தொங்கும்
தேங்காய்போல் புல்லாக் கொன்று!

ஈகையொன் றிரக்க மொன்றிவ்
விரண்டினைத் தவிர, ஏற்ற
போகத்துக் குரிய யாவும்
பொருந்தின போது மென்ன;
தேகத்தில் திடத்தைத் தேக்கத்
தினந்தோறும் கறியும் சோறும்;
தாகத்தைத் தணித்தல் கூடத்
தரமான மதுவி னுற்றுன்!

அண்டையி லடங்கி வாழும்
அயலார்மே லவளே வம்புச்
சண்டைக்குச் சென்று பற்றிச்
சக்கையாய்ப் பிழிந்து வீசிக்
கண்டதைக் கூட்டி வாரிக்
கட்டிக்கொண் டோடும் கள்ள
முண்டைக்கு முடிவு காண
முனைந்தனன் விசுவா மித்ரன்!

பனியினைப் பளிங்காய்ப் பாரில்
பன்றியைப் பசுவாய்ப் பாருக்
கனியினைக் காயாய்க் காணக்
கருதினுல், காட்ட வல்லோன்.
தனியனாய் வனத்தில் தங்கித்
தவம்புரி கின்ற ஞான
முனிவனும் முயன்ருல், மாருய்
முடியாத தெனவொன் றுண்டோ?

தந்திரம் தனிலே வல்ல
தரங்கெட்ட தாட கைக்குச்
சொந்தமென் றுள்ள அந்தச்
சோலையி லோரி டத்தை
ஐந்துபொன் குடக்கூ லிக்கென்
றமர்த்தியே, அரசன் மைந்தர்
மந்திரம் பயிலு மங்கோர்
மாலைப்போ தவளும் வந்தாள்.

''ஏடுகைக் கொண்டி ளிக்கும்
இவர்கள்யார்? இரண்டு திங்கள்
வாடகை பாக்கி வைத்தாய்;
வனத்தையும் அழித்தாய்; யானைக்
கோடுகைக் கொண்டுன் பல்லைக்
கொத்தாக உதிர்ப்பே'' னென்ருள்
தாடகை; முனிதா ழாது
''தம்பீடேய் ராமா!'' என்ருன்.

''சீரென்ப தில்லாள் சீவன்
சிந்திடச் செய்வ தொன்றே
நேரென்ப தறிந்தோ ரம்பால்
நெஞ்சினைத் துளைத்தான் ராமன்
பேரன்பி லாஅப் பெண்பேய்
பிணமாகி வீழ்ந்தாள், அப்பா!
பாரின்ப முற்ற தன்றப்
பகவானின் பலத்தா'' லென்ருன்.

கலையாட்டம் காணின், குந்திக்
களிப்புறக் கலந்து துய்த்துத்
தலையாட்டி யதைப்பா ராட்டல்
தக்கதே யெனினும் அய்யன்,
வலையாட்ட மாடல் கண்ட
வரதப்பன் வருந்தி, ''இந்தக்
கொலையாட்டம் வேண்டா'' மென்று
குறித்திது கூற லானன்:

''தீதினைச் செயினும் செப்பித்
திருந்தாம லிருப்பி னும்தான்,
'மாதினை வில்லைக் கொண்டு
மடித்தார்க' ளென்னும் மாற்றம்,
காதினைத் தீய்க்கு மன்றே
கருணையுள் ளோர்க்குக் கண்ட
மாதவன் மறந்தான் போலும்
மனுசியா யவளை மாற்ற!

வேதனைக் குரிய,— யாதும்
விவரித்தல் வேண்டாம்; வேறு
சாதியும், மதமும் பற்றிச்
சாற்ருது, சங்க கால
நீதியும், நெறியும் காட்டும்
நிகரற்ற புறநா னூறுச்
சேதியை விளக்கிச் செப்பின்
செவிமடுத் திடுவே'' னென்ருன்

''ஆவியா யண்ணன், ஆரு
ஆர்வமா யண்ணி, அன்புக்
காவலா யெண்ணித் தம்பி,
கடிநகர் நீங்கும் காட்சி,—
ஓவியம் அப்பா! எந்த
உலகிலும் ஒப்பொன் றில்லாக்
காவியம் கண்ட கம்பன்
கவிச்சக்ர வர்த்தி காணாய்!

உள்ளத்தில் கொள்ளத் தெய்வ
உணர்வுரு வொருகா லத்து
வள்ளல்கள், வறிஞர் வாழ்வு
வரலாறே புறநா னூறு;
பள்ளியில் பிள்ளை கட்குப்
பாடமாய்க் கூட வைக்கார்;
தள்ளுக குப்பை,— தப்பத்
தயங்கிடா'' தென்றான், அய்யன்.

'''தரமான வாழ்வு காணத்
தனையர்க்குத் தமிழ்த்தாய் தந்த
வருமானம்; வணங்கி வாழார்
வரலாறு! வரலா றென்னும்
உரமான தூட்டா மற்றான்
உயர்ந்தவர் தாழ்ந்தா' ரென்று
தெருமான முழங்கு கின்றார்,
தெரிந்தவர் தினமிங்'' கென்றான்.

சாற்றிய மொழிக்கு மாற்றாய்ச்
சாற்றிடும் சமர்த்தி ருந்தும்,
ஏற்றிய விளக்கும் பற்றி
எரியாம லிருப்ப தெண்ணி,
'நேற்றைய நிலையி னின்றும்
நீங்கினா னிவனு' மென்று
தோற்றிய நிலையி லய்யன்
தொடர்ந்தசொல் மாற்றிச் சொன்னான்:

"'ஏருண்டு வயலில், ஆனால்
இணைத்துழ எருதே இல்லை!
நீருண்டு கிணற்றில், ஆனால்,
நீளமாய்க் கயிறே இல்லை!
மோருண்டு வீட்டில்; ஆனால்,
முகந்தீவா ரில்லை' என்னும்
பேருண்டிவ் வூருக் கானல்,
பெயர்மட்டும் திருவூ'' ரென்றே.

'நாவாத்தா ளய்ய னுக்கு
நன்றாய்த்தான் வாய்த்தா' ளென்று
தேவாத்தாள் சிரித்தாள்; தேரித்
தெளிவித்தான் வரதப் பன்;பின்,
பூவாத்தாள் போந்து தந்த
புதுமோரைப் பருகிப் போனான்,
காவாத்தாள் மடியில் சாய்ந்து
கண்துஞ்சும் கருத்துற் றய்யன்.

## 7 கண்ணன் கற்பித்தல்

பனியிருள் பதுங்கப் பாரில்
பருதியும் பகலைப் பண்ணக்
'கனியருள் தருவை நாடும்
கவின்கிளி குயில்க' ளென்ன,
மனவிருள் மடிய, மாண்பு
மகள்,மக னென்போர் மாறாத்
தனியருள் புரியுங் கண்ணன்
தவமனை தனைச்சார்ந் தார்கள்.

'குறும்பறக் கொடிய துன்பக்
குவையறு' மெனவே கூறி,
அறம்பொரு ளின்ப வாழ்வை
அனைவரு முறவே பண்ணும்,
மறம்பெறு மனமும், மன்னும்
மதிபெறு மாண்பும், மானத்
திறம்பெறு தேசும் தேர்ந்து
தேக்கிட வேண்டு மென்றே.

வந்தவர் வழக்க மொட்டி
வணங்கியே வாழ்த்தப் பெற்றுத்
தொந்தர வின்றிக் குந்தத்
தும்பிவண் டுகளாய்க் கண்கள்
மந்திரச் செஞ்சொல் வல்லோன்
மலர்முக மதனில் மாந்தச்
சிந்தனை செய்து கண்ணன்,
செந்தமிழ் அருந்தச் செய்தான்.

இருள்நிறைந் துள்ள வேளை
எழில்விளக் கிலங்கிற் றென்ன,
மருள்நிறைந் துள்ள மக்கள்
மனஇருள் மறையு மாறாய்ப்
பொருள்நிறைந் துள்ள, புத்தம்
புதுநலன் புரியும் சொற்கள்,
அருள்நிறைந் தகத்தி னுள்ளே
அருவியாய்ப் பெருகிற் றன்றே.

'மலை'யெனப் பொய்கள் மன்ன
மதுவெனுஞ் சொல்லாய் மாற்றிக்
'கலை'யெனக் கவியாய்க் கட்டிக்
'காவிய' மெனப்பே ரிட்டே
'வலை'யென விரித்தார்; வாழ்வு
வசங்கெட, வறுமை வையத்
தலையென அலைக்க, மக்கள்
அறியாம லதில்வீழ்ந் தாழ்ந்தார்.

இளமானின் செம்பொன் மேனி
இலங்கெழி லிணைந்து காணக்
குளமீனும், அன்னப் பார்ப்பும்
குறிக்கொண்டு முந்த நீந்தும்
வளமான வையம் வாய்த்தும்
வாழ்வுவாய்க் காதோ ராளும்;
ஒளிமானும் உண்மைக் கல்வி
உளமான துட்கொள் ளாதே.

கற்கின்ற கல்வி வாழ்வில்
கடைப்பிடித் தொழுக வொன்றி
நிற்கின்ற கல்வி யின்றி,
நெறிமாறி நின்று நெஞ்சை
விற்கின்ற கல்வி, வேண்டா
விழல்கதை விளம்பும் வெற்றுச்
சொற்குன்ற மாகிச் சூழும்
சுகங்குன்றி மணியா யிற்று!

'அலைக்கோட்டில் துயில்செய் கின்ற
அரியினை, அயர்வ கற்றிச்
சிலைக்கோட்டு மகவாய்ச் சேர்த்துச்
செனித்திடச் செய்வ தற்காய்,
மலைக்கோட்டி லிருந்தோன், மங்கை
மாரையே காணா மாண்புக்
கலைக்கோட்டு முனி,கௌ சல்யா
கருக்கொளும் கருமம் செய்தான்.

பாருக்குள் பக்தராய் நாம்
'பரம்பொருு' ளென்றும் பன்ன,
நீருக்குள் ளிருந்து நீங்கி
நெருப்புக்குள் நிறைந்தய் யோதத்
ஊருக்குள் உதித்தான் ராமன்!
உத்தமி சீதை காட்டில்
ஏருக்குள் எழுந்தா' ளென்ருன்,
இயல்புக்கு மாருய்க் கம்பன்.

வெற்றினை யெடுத்தான் வீரன்.
வீசினன்; வீழ்ந்தி லிங்கை
அற்பர்க ளழிந்தா' ரென்னும்
அளப்புக ளதிலே! மக்கள்
பொற்பினை வளர்க்க மற்றிப்
பொய்களே போது மென்று,
பற்பல பாட மாக்கிப்
படிப்பிக்கும் பள்ளிக் கூடம்!

'அரி'யென்று புகன்ரு லன்றே
அவலம்போம்! 'அழகுக் காவி,
சுரியொன்றி நீண்ட கூந்தல்
சுகுமாரி சீதை!' யென்று
வரியொன்று படித்தால் வாழ்வில்
வறுமைபோம்' எனநம் நெஞ்சில்
திரியின்றி விளக்கை யேற்றும்
தெருப்பிர சங்கி மார்கள்,

'காக்கின்ற கடவுள், காக்கும்
காவலன் மகனய்க் காட்டில்
போக்கொன்றிப் போன போது,
பொன்னிபோல் வந்த பெண்ணை
மூக்கன்றி முலையுங் கொய்து
முடுக்கின' னெனமொ ழிந்தால்,
'நோக்கொன்றுஞ் சுவர்க்கத் திற்கோர்
நுழைவுச்சீட் டாயிற்' றென்பர்.

'புண்ணியக் கதைக' ளென்றே
புளுகினில் புலனைப் போக்கி,
மண்ணினி லுழைத்து வாழும்
மக்களின் மனத்தை மாய்க்கக்
'கண்ணியம், காசு, காணி,
காதல்,காப் பனைத்தும் காண
எண்ணிடின், ராம நாமம்
ஏற்றுவீ ரிதயத்' தென்பர்.

குஞ்சுணும் இரையைக் கொண்டு
கொடுக்காத குருவி, குந்தி
மஞ்சுணும் மரத்தில் பூத்த
மலர்களை மசியக் கொத்தி,
அஞ்சுணா வூட்டிக் குஞ்சை
அவஞ்செய்த தென்ன, மக்கள்
நெஞ்சுணும் நிலைக்கு நேரா
நெறிமுறை செய்தான், கம்பன்!

முருடராய் முதலி ருந்தும்
முறைகெட்டு முயன்று மூடித்
திருடராய்த் திறமி ருந்தும்
தேவைக்கு மிஞ்சித் தேடிக்
குருடராய்க் கண்ணி ருந்தும்
கோட்பாடு கண்டு கொள்ளாப்
புருடராய்ப் பொய்மைப் போற்றிப்
பொன்றுவார், புகழில் லாதே!

அத்தனை யொத்தார், யாதும்
அறியாதா ராகி அய்யர்க்
கொத்தாரா யொழுகி ஊரில்
உடையாரா யுவந்து வாழ்ந்து,
வித்தாரப் பொய்கட் குத்தம்
வேலையும் விளைவும் நல்கும்
பித்தேறிப் பிழையோ ராது
பெரியோராய்ப் பிழைத்தற் கென்றே,

'தேவனே நிபுண ஞுக்த்
திருப்பதி மலையைத் தேர்ந்து
கோவில்கொண் டுளன்நாம் கூடிக்
கும்பிடற் கென்றே! கொண்ட
பாவத்தைப் பற்றி யார்க்கும்
பயம்வேண்டாம் பணமொன் றுண்டேல்;
கேவலம், பழி,பொய், கீழ்மைக்
கேடெலாம் நீக்கற்' கென்பர்.

கோழிவாய்க் குரல்கொ டாமுன்
குடிலின்வாய் நீத்தேர் பூட்டி
மேழிவாய்க் கைவைப் போரே
மிடிமைவாய்ப் படுவோ ரானர்!
நாழிவாய்க் கைவைப் போரோ
நடுமைவாய்க் காது நாளும்
தாழிவாய்ப் பெய்தும் தாழாத்
தனம்வாய்த்துத் தனிக ரானர்.

பிடித்திடப் பிடிப்பில் லாதே,
பேணிடும் பெண்டு பிள்ளை
உடுத்திட உடையில் லாதே,
உழைக்கினும் கஞ்சி காய்ச்சிக்
குடித்திடக் குடிலில் லாதே,
கூர்ந்தநல் லறிவி ருந்தும்
படித்திடப் படிப்பில் லாதே
பலகோடி மக்கள் பாரில்!

சத்தம்,போர், அழுகை, நோய்கள்,
சாக்காடு,— சாப்பா டின்றி
மொத்தம்பேர் தொண்ணூற் றுக்கும்
முப்போதும் குச்சு வீட்டில்!
'சித்தம்பார்; சிவம்பார்! செப்பின்
சிரமமே யின்றிச் சேர்த்த
சொத்தும்பார்! சுகம்பார்!' என்போர்
சொச்சம்பேர் மச்சு வீட்டில்!

அமுதாய தமிழின் தேய்வு
ஆரியம் கூட்ட லாலே!
சமுதாயத் தேய்வு சார்ந்த
சமத்துவம் கழித்த லாலே!
நமதாய நாட்டின் தேய்வு
நச்சுநூல் பெருக்க லாலே!
உமிதேய்வு அரிசி யாய்,நெல்
உயிர்ப்பறல் வகுத்த லாலே.

பாரியின் பைந்த மிழ்பேர்
பக்தவச் சலனாய்ப் பண்ணிக்
காரியின் கனித்த மிழ்பேர்
காமரா சாக்கிக் காட்டி,
ஓரியின் ஒண்த மிழ்பேர்
உருத்திர னெனவே ஓதிச்
சேரியின் செந்த மிழ்பேர்ச்
செங்கனைத் தெருவில் சேர்த்தார்.

தாய்செலும் தடத்தில் கன்றும்
தடையின்றி நடப்ப தொப்ப,
ஆய்அர்த்த நாரி யாகி,
அதிகமான் அரங்க னாகிச்
சேய்பால சுப்ர மண்யம்,
செங்கோடன் வெங்க டேசாய்ப்
போய்த்தமிழ் புலமை போகப்
புகுத்தினர், புராணப் பொய்யை!

மதிமாற்றப் பட்ட மக்கள்
மறப்பண்பு மறக்கு மாறாய்
விதிமாற்றி, விருப்பம் மாற்றி,
வெவ்வேறு சாதி மாற்றிக்
கதிமாற்றி, மேல்கீ ழென்று
கைகூப்பி வணங்கச் செய்தார்;
நிதிமாற்ற மில்லா ரெல்லாம்
நேர்,நிறைக் குடிக ளானர்!

கட்டிய கட்டை விட்டுக்
காலையில் திரிய வைத்தும்
பட்டியில் பயின்ற மாடு
பழக்கத்தின் பயனாய்ப் 'பந்தம்
விட்டது, கிட்டிற் றின்று
விடுதலை' யெனவேண் டாது,
மட்டற்ற மகிழ்ச்சி யோடும்
மாலையில் வருவ தொத்தார்!

குழியினில் விழுந்த யானை
கொம்பனா யிருந்தும் கூடப்
பழியினைத் தீர்த்துக் கொள்ளப்
பயந்ததால் பாகன் பார்த்தே,
'எழு'வெனி னெழுந்து 'மிங்கே
இரு'வெனி னிருந்து மேவல்
வழுவுறா தடங்கிச் செய்தே
வசையுறல் போன்றும் வாழ்வார்!

காப்புற்ற தனது வீட்டுக்
கதவினி லடுப்பி னின்றும்
தீப்பற்றி யெரியக் காணின்
திடுதிடென் றோடித் தண்ணீர்
மூப்புற்ற கிழவி யேனும்,—
முகந்துவார்த் தவித்தல் விட்டுப்
பூப்பற்றிப் போட்டுத் தீயைப்
பூசிக்க மாட்டாள் கண்டீர்!

அறமெனும் அன்னை யீன்ற
அன்புச்சொல்; அறிவு சான்ற
திறமெனும் செவிலி காத்த
தெளிவுச்சொல்; தீமை தீர
மறமெனும் தோழி போற்றும்
மாண்புச்சொல்; மதிப்பு வாய்ந்த
புறமெனும் நூலில் பூப்போல்
புலன்கொளப் பொதிந்த பொன்சொல்!

'ஒப்புர வென்னுஞ் சொல்தான்
உலகுக்கோர் தெய்வ' மென்றே
அப்பராழ் வார்கள் செப்பற்
கறியாராய்ப் போன தாலே,
செப்பரும் விதமாய் மக்கள்
சீர்கெட்டுச் சிறுமைப் பட்டுத்
தப்புகள் பெருகி நாடே
தாறுமா ராயிற் றின்று!

இச்சொல்லி னியல்பை யாய்ந்திங்
கிருப்பவர் செயல்ப டுத்தின்,
குச்சில்லை மச்சில் லாமல்;
'கொடுமையே' யென்னக் கொல்லும்
நச்சில்லை அமிழ்தல் லாமல்;
நானிலத் திருப்போர் தம்மில்
எச்சில்லை தாழ்வில் லாமல்
இனிக்குமெல் லார்க்கும் வாழ்வே.

புலன்களைப் பழமை யின்கண்
புகுத்திநன் காய்ந்தோர் சொல்வர்:
குலங்கோத்தி ரங்கள், கோயில்,
குரு,பக்திக் கூத்தெல் லாம்நம்
நலன்களுக் கெதிராய், நாச
நடைமுறை வழக்காய், வாழ்வில்
விலங்குக ளாயிற் றின்று
விஞ்ஞான நெறிகட் கென்றே

குடியாது? கொள்கை யாது?
கோன்முறை— யதுயா தென்று
படியாது, பயனை யாய்ந்து
பாராது, பண்ப டாது,
'முடியாது விடநம் மாலே
மூடத்த னம்தா' னென்றால்,
விடியாது பொழுது: வாழ்வில்
வேதனை,— யிதுதீ ராதே!

உழைப்பவர் பலராய், ஒன்றி
உழைக்காம லோங்கி யுண்டு
பிழைப்பவர் சிலராய் நாட்டில்
பிழைபடப் பேணு மாட்சி
அழிப்பவ ராகோ மாயின்
அவனியிற் பிறந்தும் வாழ்வை
இழப்பவ ராவோ மென்ப
தெடுத்துமக் கியம்பு கின்றேன்.

காடுநம் முடைமை; காட்டைக்
கைப்படக் கடிந்து கண்ட
நாடுநம் முடைமை; நாட்டில்
நல்முற நாளும் பட்ட
பாடுநம் முடைமை; பாட்டின்
பயனெலாம் பதுங்கி யுள்ள
வீடுநம் முடைமை யன்றி
வீணர்தம் முடைமை யாமோ?

துதிபோது மென்னுர் நம்மைத்
துச்சமாய்த் தூற்றி ஞலும்,
நிதிபோது மென்னுர் நேரில்
நெற்றிக்கண் காட்டி ஞலும்,
மதிபோது மென்னு மல்நாம்
மனத்திட்ப மெய்தி, மற்றிக்
கதிபோது மென்னுப் போரில்
கைகோத்து நிற்போ மின்றே.

மிகமிகக் கொடிய மேல்கீழ்
மிரட்டலி லிருந்து மீளல்,
அகமிக மலர்த்த லான
அரசிய லமைத்துக் கொள்ளல்,
சுகமிக, உழைக்கும் சொத்துச்
சுதந்திரம் பொதுமை யாக்கல்
தகுமிக வெனவே, தர்க்கத்
தமுக்கடித் துரைக்கின் றேன்நான்!

சுற்றமும் துணையும் சூழ்ந்து
சோற்றுக்கா யுழைப்போர்க் குள்ளே
ஒற்றுமை யுணர்ச்சி ஓங்கும்
உயிர்துடிப் பொன்றுண் டாயின்,
மற்றவை யனைத்து முற்று
மகிழ்ந்துநாம் வாழ்தல் உண்மை!
வெற்றிநம் முடைய தன்றோ
வேதனை பிறர தென்றோ!

இந்தத்தத் துவத்தை யேற்ப
இதயத்தி லிருத்தி யெண்ணிச்
சிந்தித்துத் தெளிவீர்! செல்வர்
சீர்கேட்டைச் சினந்து பேசி
நிந்தித்துப் பயனென் றில்லை
நிலைமாற்ற நினைப்பீர்! நிற்க,
மந்தித்தல் மறந்து, செல்க!
மனத்திட்ப மெய்தற்'' கென்றோ.

பாகொன்றும் மொழியாள்; பாவின்
பயனென்றும் வழியாள்; பற்றி
வேகின்ற வெயிலில் வேர்க்க
வீடுசேர்ந் ததுபார்த் தய்யன்,
"போகின்றாய், வருகின் றாயுன்
பொன்முகப் பொலிவு குன்றின்
நோகின்ற தன்றோ வொன்றி
நோற்றுனைப் பெற்ற நெஞ்சம்!

இழுக்குக்கிங் கிடமா யென்னை
எதிர்க்கிறாய்; இரங்கிக் கேட்டால்,
'கிழக்குக்கு மேற்கு மெத்தக்
கேடுசெய் கிற'தென் கின்றாய்;
'உழக்குக்கிங் காழாக் கொப்பி
உதவிட விலை'யென் கின்றாய்!
வழக்குக்கு மாறா யின்றும்
வழங்கவொன் றிலையா?" என்றான்.

"அப்பாவென் றாலப் பாதான்;
அகிலத்தின் மீதப் பாவுக்
கொப்பாக உரைக்கக் கூட
ஒருவரு மிருக்கா ரோர்ந்தால்,
தப்பேதும் செய்யார் நெஞ்சில்
தந்திரம் தளிர்க்கா தப்பா!
எப்போதும் சொன்னேன்; சொன்னேன்,
இப்போதும் தப்பா" தென்றாள்.

அகந்துளி அனுங்கிற் றந்த
ஆற்றால்சா லுரையால்; அப்பா
முகந்துளி முரணிற் றுற்ற
மூப்பினால்; மொழுக்கு மேனி
சுகந்துளி சுருங்கி னாற்போல்
சோர்ந்தவ ராகிச் சொன்னார்:
"சகந்துளி புரிந்து கொள்ளும்
சமர்த்தற்ற பெண்நீ!" யென்றே.

''கண்ணனைக் கண்டு காத்துக்
கவின்தமிழ் கற்கின் நீரும்,
அண்ணனை அருமைத் தம்பி
அடைந்தவா றுண்மை மேவிப்
பண்ணினி லமைத்த வாழ்வுப்
பாடலாய்ப் பரிண மித்து
மண்ணினில் மதிக்கும் முல்லை
மலராகி மணப்பீ'' ரென்றாள்.

''பாரதம், கீதை,— பார்த்துப்
பரக்கநான் படித்தேன்; பார்த்த
சாரதி அய்யங் கார்பால்
சங்கநூல் கற்றேன்; சாற்றின்,
யாரிது மறுப்போர்! அக்கா,
அல்வாவைச் செய்து, காரம்
பூரிபோட் டுள்ளாள்! போய்நீ
புசித்துவா பொன்னே!'' யென்றான்.

''சுருங்காது குறளைக் கற்றுச்
சுயமாக ஆய்ந்தோ ரெல்லாம்
வருங்கால ஒளியா யொன்றி
வையத்தில் வாழ்வா ரப்பா!
பெருங்காய மிட்டி ருந்தால்,
பெட்டியே மணக்கும்! நீங்கள்
ஒருங்காக அல்வா, பூரிக்
கோட்டினீர் வாழ்வை'' யென்றாள்.

மெழுகிக்கொண் டிருந்த சீதா
மிரட்சியாய்த் திரும்பிப் பார்த்து,
''கழகத்துக் கனுப்பி வீட்டுக்
கதைகெடச் செய்தீ ரப்பா!
பழகவே இயலா வாறுய்ப்
பணிவுபாங் கற்றுப் பைய
அழுகிய கிழங்காய் நம்மை
அருவருப் புறச்செய் கின்றாள்.

வேலியை நெறித்துச் சென்று
விருப்பமாய்ப் பயிரை மேயும்
காலியைக் கட்டி வைத்தல்
காசினி வழக்கா றப்பா!
'தாலியைத் தரித்துக் கொள்ளத்
தரமாட்டேன் கழுத்தை' யென்னும்
நீலியை விட்டால் என்ன
நேருமென் றறியீர் நீரும்!

'அவல்குன்றை நனைய விட்டால்
அவலமே மிஞ்சு' மென்று
நவில்கின்றேன் நானும்; நீங்கள்
நன்குயோ சித்துச் சற்றும்
கவல்கின்றீ ரில்லை! சுட்டிக்
காட்டினும் காணீர்! நாளைச்
சுவல்குன்ற மானக் கேட்டைச்
சுமக்கவே நேரு'' மென்றாள்.

''படிப்புண்ட தில்லை யேனும்,
பாங்காக உனக்கு வீட்டில்
அடுப்புண்டு சமைக்க! அப்பா,
அயராது தேடி வைக்கும்
முடிப்புண்டு செலவு செய்ய!
முகம்முறிந் திடுமா றேசத்
தடிப்புண்டு நாக்கில்! வேறு
தடையுண்டோ?'' என்றாள், நீலா.

''குதிரானுன், தின்று நன்றாய்க்
கொழுப்பேறி உடலெல் லாம்;கூர்ங்
கதிரானுள், கேட்பார் காது
கறுகிடத் துளைக்குஞ் சொல்லால்!
எதிரானுள், நமது தேச
இனமத இயல்புக் கப்பா!
புதிரானுள் நீலா இன்று
போகின்ற போக்கி'' லென்றாள்,

''மேலாவேன்; இவற்றோ டின்னும்;
மீதியைக் கேட்டுக் கொள்நீ!
ஆலாவேன், வியர்த்து மேனி
அடிசுட வருவோர்க் காவின்
பாலாவேன்; பாடு பட்டுப்
பசித்தவர் பருகிப் போகக்
கோலாவேன், உன்போற் கோணிக்
குறுக்கிடும் கொடியோர்க்'' கென்றாள்.

சொத்துடன் சுகத்தில் சொக்கும்
சுயநல அப்பர் சொன்னார்:
''ஒத்துடன் படவுன் தங்கைக்
குளமொப்பா துணர்ந்து பேச்சை
இத்துடன் நிறுத்து சீதா!''
என்னவும், இலங்கா நின்று
முத்துடன் பவளச் செப்பாய்
முறுவலித் தகன்றாள், நீலா!

வானீன்ற மதியாய் வார்த்து
வையத்தை வழங்கச் செய்யும்
தேனீன்ற தமிழைக் கற்றுத்
தெளிந்தவள்; தியாக மில்லாத்
தானீன்ற தருணி யேனும்,
தக்கதன் றென்றால் தாக்கும்
ஊனான்று முனைகட் கஞ்சி
உளந்திறந் துரைத்தா னய்யன்!

'''படிப்பதுண் டெனினும் நீயோர்
பார்ப்பனி; பலரும் பார்க்க
நடுப்பகல் பொழுதில் நாளும்
நம்மகத் துணவு கொண்டு
கொடுப்பது கூடா' தென்றேன்.
'குடிகளைக் கெடுக்கு மூங்கள்
நடப்பதில் முளைத்த பாவம்
நான்களை கின்றேன்' னென்றாள்.

'பகையென்றும், பாவ மென்றும்
பாராமல் பணத்தைத் தேடித்
தொகையொன்று சேர்த்தா லன்றித்
துலங்காது சுகவாழ்' வென்றேன்;
முகையொன்றி முகிழ்த்த முல்லை
முறுவல்போய், முகில்மோ தல்போல்
நகையொன்றி, 'அதுதான் குள்ள
நரிப்பிழைப் பப்பா!' என்றாள்.

'தாயினும் சிறந்த தாய்இத்
தனம்நம திளமைக் கீன்ற
சேயினும் சிறந்த சேய்இச்
செல்வம்நம் முதுமைக்' கென்றேன்;
ஆயினும், துளியுங் கூட
அயராம லந்தோ அப்பா!
பேயினும் பெரும்பே யானீர்
பேராசை தனில்நீ' ரென்றாள்.

'கல்லாதா ரில்லை யிந்தக்
காசினி மீதென் றாயின்,
பொல்லாத தெய்வப் பொய்கள்,
பொருள்,மத பேத மெல்லாம்
செல்லாத தாகும்! சேரச்
செப்பஞ்செய் தமைத்துச் செல்வ
மில்லாதா ரில்லை' யென்ன
இயங்கிடும் நாடென் கின்றாள்.

நிரப்புக்கு நேர்ந்தோன் நிற்கும்
நிலையில்நான்; நிமிர்ந்து நின்று
வரப்புக்கு மிஞ்சி வார்க்கும்
வள்ளல்நீ லாவா யுள்ளாள்!
எரிப்புக்க வைத்தூ றுக்கற்
கெண்ணாதே யெனைநீ! ஏசச்
சிரிப்புக்குள் ளாதல் நேரும்
சீரழிந்'' தென்றான், அப்பா!

நீலியின் நிலையை அப்பா
நெஞ்சுநொந் தியம்பக் கேட்டு,
'வேலியி லிருந்தோ ரூனே
விருப்பமாய் விரைந்தெ டுத்துச்
சேலையில் மறைத்து வைத்த
செய்தியா' யெண்ணிச் சீதா,
பாலையில் கட்டப் பட்ட
பசுவெனப் பதைத்தாள், பாவம்!

எப்போது மில்லா தின்றிங்
கெல்லாமும் எறு மாருய்த்
தப்பாதுற் றுள்ள தென்றே
தன்னுளந் தெளிந்தும், தாங்கும்
அப்பாவி னியல்பா லொன்றும்
அவத்தையென் றறிந்தும், யாதும்
செப்பாது சீதா நின்று
சிந்தினள், கண்ணீர் அன்றே.

'சிங்கங்க ளெல்லாம் காட்டில்
செத்தொழிந் திட்ட தென்று
கங்குலில் முயல்,மான், பன்றி
களிப்புற்றுத் துள்ளிற்' றென்னச்
சங்கமொன் றமைத்துச் செய்திச்
சஞ்சிகை கற்போ ரால்தான்
இங்கிதம் மங்கிற் றூரில்
எனஎண்ணி னன்சின் னய்யன்.

ஓங்கிய வேத கோசம்
ஒலிக்காத குறையீ தொன்று;
ஆங்கிலக் கல்வி நாட்டில்
அனைவரும் பயில்வ தொன்று!
நீங்கிய தச்சம்; நேராய்
நிமிர்ந்துநிற் கின்றார்; என்றும்
தூங்கினோர் விழித்தார்ப் போன்றோர்
தோற்றமும் தோன்றிற் றன்றே!

தற்பர ஞானந் தன்னைத்
தளராது விதைத்துத் தானே
பற்பல பழிகள் பாங்காய்ப்
பாரினில் விளைவிக் கின்ற,
விற்பனச் சின்ன அய்யன்
விரைந்துவந் தங்கே சுந்தன்
நிற்பது கண்டு, ''வாடா,
நேசா!சற் றிங்கே,'' யென்றான்.

தந்தையும் தவறி, பெற்ற
தாய்,தங்கை, தம்பிக் காகச்
சிந்தனை செய்யா தய்யன்
சேவக னாகிச் சுந்தன்,
நிந்தனை நேரா தெந்த
நேரமும் வேலை செய்வான்,
சந்தனப் பொட்டும், பாட்டின்
சந்தமும் தவிர்க்கா தோனாய்!

பற்றிலாப் பழையர் பாரில்
பலராகப் பணத்தைப் பண்ணக்
கற்றவர் சிலரே யாகக்
கடுந்துயர்க் கடலில் மூழ்கப்
பெற்றவர், பெற்ற பிள்ளை
பெரியவ னான பின்பும்
மற்றவர்க் கடிமை யாக்க
மறுக்கின்மண் மறுக்கு மன்றோ?

கொட்டிலைக் கூட்டிக் குட்டிக்
குதிரையைத் தேய்த்துக் கொள்ளைக்
கட்டுவான்; கன்றைக் காட்டிக்
கறந்துபால் தருவான்; கொல்லை
ஒட்டுமாஞ் செடிகட் கொட்ட
ஊற்றுவான் தண்ணீர் சேந்தி!
வட்டமாய் மாட்டுச் சாணம்
வறட்டியாய்த் தட்டி வைப்பான்.

துண்டினைத் தலைக்குச் சுற்றித்
துடையள விறுக்கி வேட்டி,
வண்டியைப் பூட்டிக் குந்தி
வலக்கையால் சொடுக்கின் சாட்டை,
'சண்டியிஃ தெ'ன்னுங் காளை
'சக்கரம் கழன்ற' தென்று
கண்டவர் கத்து மாறு
காற்றாகப் பறக்கச் செய்வான்.

படிக்காத படியாய் விட்டுப்
பணியாது வளர்ந்த சுந்தன்
நடிக்காத நடிகன்; நல்ல
நகைச்சுவை யாளன்; நாளுட
கடிக்காத படியாய் வாசல்
காப்பவன் றனைஅய் யன்தன்
அடுக்காத தடித்த னத்திற்
காளாக்க அடியைப் போட்டான்.

''எதுவேனு மிருக்கா? சீதா!
இடைப்பகற்'' கெனச்சின் னய்யன்,
முதுவேனிற் பருவம் முத்தாய்
முகத்தினை வியர்த்து மூட,
'மதிவான வெளியை மாற்றி
மனைபுக்க' தென,அம் மங்கை
இதவான இனிப்பு, காரம்
ஏற்குமா றேந்திப் பூந்தாள்.

அறத்திற்கு மாக்க மாகா;
அறிவுக்கும் அடுப்ப தாகாப்
புறத்திற்கும் பொருத்த மாகா,—
பொத்தலாய்ப் பொடிந்து போன
முறத்திற்குச் சாணி பூச
முயல்பவர் போன்று — மூடன்,
ஒறுத்தற்கின் ருவா னென்றே
உறுதுணை யாக்கற் குற்ருன்.

'இவையாக மொத்தம் சுந்தன்
இன்றுதின் பதற்கீ' யென்னச்
சுவையாக நெய்யைக் கூட்டிச்
சுட்டதேன் குழலும் சொக்க,
நவையேகத் தாளித் திட்ட
நறுமணத் துவைய லப்பம்
குவையாகச் சுந்தன் தட்டில்
கொட்டிவிட் டகன்ருள் கோதை!

'கருங்காலிக் கட்டை' யென்று
கருதவே வளர்ந்தும், கற்று
வருங்கால அறிவு வாய்க்கா
வாலிபன், வயிறு வாழ்த்த
ஒருங்காகத் தின்று தீர்க்க
உட்கார்ந்த வுடனே, ஓர்ந்து
மருங்காக வந்து நின்று
மணியய்யன் மலர்ந்தான் வாயும்!

''என்னடா சுந்தா! ஏற்ப
இருக்கின்ற தாடா! எல்லாம்
தின்னடா! உனக்கும் நல்ல
திசையடா இனிமே'' லென்றே,
சின்னடா, பெரிய டாவும்
சிரிப்போடு போட்டுப் பேசி,
முன்னிடா வழக்கை யூரில்
மூட்டிட முனைந்தா னய்யன்!

''பாசன வாய்க்கால், பள்ளம்,
படுகைகள் பார்க்க நாளைத்
'தாசில்தார்' வரவுள் ளார்;என்
தாய்மாமா அவர்!உன் பேரில்
கோசனுர் படுகை பட்டா
கொடுத்திடக் கூற, நானும்
யோசனை செய்தேன்; நீயும்
ஒப்புவா யன்றோ'' என்ருன்.

குப்பையில் கூடத் தெய்வம்
குடியுள்ள தாகக் கூறி,
ஒப்பவும் செய்து கோயில்
ஊரிலுண் டாக்கு மய்யன்,
அப்பம்,தேன் குழலுக் கொப்ப
ஆதார ஆசைச் சொற்கள்
செப்பிடக் கேட்ட சுந்தன்
சிந்தையில் பொங்கிற் றின்பம்!

''இனிப்பிட்ட பணியா ரம்போ
லினிக்குஞ்சொல் லிதுவென் ருலும்,
தனிப்பட்ட முறையில் பட்டா
தன்பேரில் தரவே கோரி
மனுப்போட்டுள் ளானும், மற்றும்
மாரிமுத் தானு'' மென்ருன்,
கனப்பிட்டுக் குளிரைக் காயக்
கருதுவோர் நிலையில் சுந்தன்.

''தாயுள்ளாள்; தந்தை யுள்ளான்;
தமருள்ளா ரெனினும், தள்ளா
வாயுள்ள பிள்ளை தானே
வாழ்ந்திடும்! வாழ்வு காண,
நீயுள்ளாய்; நானு முள்ளேன்!
நினைத்ததைச் சாதிப் போன்நான்;
காயுள்ள மரத்துக் குத்தான்
காப்பு,கௌ ரவம்கா'' ணென்றான்.

பண்ணையை பருகி னான்போல்
பரவசப் பட்ட சுந்தன்,
''பெண்ணையை யறவே விட்ட
பெரியவ ரிருப்பார்; பேசின்
மண்ணையை விட்டா ரில்லை;
மகிழ்கிறேன்! மதித்து, மற்றவ்
விண்ணீச' னெனவே உம்மை
வேண்டிநான் துதிப்பே'' னென்றான்.

''நீரிலே நீந்தும் மீன்போல்
நிலத்திலே நீந்து வோன்நான்!
'சேரியில், சுந்தன் மட்டும்
செல்வ'னென் றேத்திச் செப்பும்
பேரையும் பெறுவாய்! யாதும்
பெரியதன் றெனினும், நீயென்
காரியம் முடித்தால், நானுன்
கருத்தினை முடிப்பே'' னென்றான்.

''விதிமட்டு மிருந்தால், நீங்கள்
விரும்பிடும் விதமா யென்னை,
'இதுமட்டும் செய்'யென் றேவின்
'இயலாதே'ன் றியம்பா தென்வாய்!
'அதுமட்டு முண்மை' யென்றே
அறிவித்தான் சுந்தன்; ஆசை
மதுமட்டும் குடித்து விட்டு
மயங்கினேன் மகிழ்தல் போன்றே.

'கந்தனும் முகுந்த னும்தாம்
காக்கும்தெய் வங்க' ளென்னும்
இந்தநம் நாட்டில், 'செல்வம்
இல்லாம லிருப்போ ரெல்லாம்
விந்தைச்சின் னய்யன் போன்ற
வித்தகர் விளையாட் டில்கால்
பந்துக ளாக!' வென்றப்
பரப்பிரம்ம னெழுத்தொன் றுண்டாம்!

கட்டாயம் மருந்தை யிட்டுக்
கட்டாமல் விட்டுப் புண்ணைப்
பட்டாலே மறைத்துப் பாரோர்
பார்க்காத படியாய்ப் பண்ணி,
'எட்டாத மதியை நானின்
றெட்டினே' னென்னும் ஏக
முட்டாளைப் போன்றவ் வய்யன்
முறுவலை யுதிர்த்தா னன்றே.

## 10 மாலாவும் நீலாவும்

''சேறின்றி, மணலா யொன்றிச்
சிறுபெருங் கற்க ளொன்றிக்
கூறின்றிக் குழிமே டாகிக்
கோணல்நேர் கொண்ட தேனும்,
ஆறென்று லாறே! ஆகா!
ஆற்றுக்கு நிகரா றன்றி
வேறொன்று கூற வுண்டேல்
விளம்படி'' யென்றாள், நீலா.

வில்லொன்று வேலொன் றென்ன
விளங்கிடும் புருவம் கண்ணோ
டல்லொன்று கூந்தல் நீலா
ஆவலாய் வினவக் கேட்டும்,
'நில்'லென்று சொன்னால் கூட
நிற்காது செலுமவ் வாற்றின்
கல்லொன்றி நின்ற மாலா
கருத்தொன்று காணச் சொன்னாள்:

''மூத்துக்கொண் டிருந்த மோன
முழுமதி முகிழ்த்து மோகக்
கூத்துக்கொண் டிருந்து மிந்தக்
குமுதமேன் கூம்பிற் றன்று?
பூத்துக்கொண் டிருந்த பூவாப்
புலன்கவர் புத்தேள் புல்லக்
காத்துக்கொண் டிருந்து மிந்தக்
கமலமேன் கவிந்த தின்று?

நேருக்கு நேராய் நீண்டு
நிழல்தரு மரங்கள் நேர்ந்திவ்
வூருக்கோ ருடைமை யாகி
உதவிட வுள்ள, ஊறு
பரிக்கும் இதயத் தேக்கம்
இருக்குமா 'மீணைந்து வாழ்வில்
நீருக்கு நெஞ்சீந் தன்றி
நிலைபெரு தின்ப' மென்றே.

'காலையி லரும்பிப் போதாய்க்
கடும்பகல் கழியக் காத்து,
மாலையில் மலரும் நல்ல
மல்லிகை மகிழ்ச்சி மன்னப்
பாலையைப் பயிலும் வண்டைப்
பதியாக வரித்துப் பாங்கி,—
சோலையின் மணத்தைத் தூதாய்ச்
சுகம்விழைந் தேவிற்' றென்பர்.

வேளாக விளைந்தா ருன்னை
வெகுவாக விரும்பி வேட்டுக்
கேளாக வேண்டிக் கேட்டால்
கிளையாக வேண்டா போநீ!
நாளாகி, வாய்த்த பெண்மை
நலங்குன்ற நேரின், மூப்புக்
காளாக வேண்டி நேரு
மல்லவோ?" என்றாள், மாலா.

ஏலாத தெதுவும் கூறி
இதயத்தை நோகச் செய்யா
மாலாவின் மதுர வாக்கு
மகிழ்ச்சியா யிருந்த தேனும்,
நீலாவின் நிலைக்கு முற்றும்
நேர்முரண் படவே, நெற்றி
மேலாகப் புருவம் கோணி
மிருதுவாய் மிழற்ற லானாள்:

"சீராய்ந்து, செல்வ மாய்ந்து,
செல்வியர் திறனு மாய்ந்து,
பாராய்ந்து கொண்ட பண்டைப்
பழக்கத்தைப் பகர்ந்தாய் மாலா!
நேராய்ந்து, நினைவை யாய்ந்து,
நிறை,நெறி யாய்ந்து, நேரில்
ஆராய்ந்து கொள்ளும் காலத்
தாராயா திவ்வா" றென்றாள்.

''சுடர்கின்ற மணிநீ! உன்றன்
சுகம்நாடிச் சொன்னேன்: சோக
இடர்குன்ற இருந்து பெண்மை
இன்பத்தை எய்த எண்ணின்,
'படர்கின்ற பருவம் வாய்த்த
பைங்கொடி பற்றி வாழ்வைத்
தொடர்கின்ற கொளுக்கொம் பொன்றின்
துணையின்றி யமையா' தென்றே?

'அச்சிலே வார்த்தெ டுத்த
அழகிய அடலே' றென்ன,
மச்சுவீட் டய்யர் பிள்ளை,
மணங்காண வந்துன் வீட்டில்,
சொச்சியும் பச்சி யும்தான்
சுவைக்கின்ற பொழுதே, சூடாய்
'நிச்சயம் வரனெ னக்கு
நேரில்லை' யென்று யன்றும்!

சொல்லேர்ந்த மகளிர் சொக்கிச்
'சுகுமார' னெனவே சொல்லப்
பில்லூரி லிருந்து வந்தான்,
பிள்ளையாண் டானும் 'பீ.ஈ'!
எல்லார்க்கு மிதய மோங்க,
எள்ளள வெண்ணு மல், நீ
'ஒல்லாதித் திரும ணத்துக்
குடன்படேட' னென்று யின்றும்!

வானிலா, கை, கால், வாய், கண், —
வடிவான உடலும் வாய்த்து
'மானிலத் துனக்குத் தக்க
மாப்பிள்ளை' யெனவே வந்தும்,
தேனிலே சொல்கு ழைத்துத்
தித்திக்கச் 'சரி'யென் னுமல்
பூநலந் தவிர்த்தாய்; புத்தி
புறம்வைத்தாய் பொறுப்போ ராதே!

பித்தாகிப் பிதற்றத் தந்தை,
பிறந்தவள் முகத்தில் பின்னும்
பத்தேனக் கரிப டிந்த
பான்மையாய்ப் பதைக்கச் சொந்த
அத்தானும் ஆவ தோரா
தயர்ந்திட, அலைக்கு முன்றன்
உத்தேச மின்ன தென்றின்
றுரையடி'' யென்ருள், மாலா!

''இனங்கண்டு மணத்தல்; ஏமுற்
றெழில்கண்டு மணத்தல்; ஏற்ற
கனங்கண்டு மணத்தல்; கற்ற
கலைகண்டு மணத்தல்; காக்குந்
தனங்கண்டு மணத்தல் தாமும்
தரங்கண்டு மணத்த லன்று!
மனங்கண்டு மணத்தல் காமம்;
மதிகண்டு மணத்தல் காதல்!

பாடெனின் பாடிக் காட்டிப்
பரதநாட் டியமும் பண்ணே
டாடெனின், ஆடிக் காட்டி
அடிதொடை அழகு காண
ஓடெனின், ஓடிக் காட்டி
உளமொட்டாற் குரிய ளாகி,
மாடெனக் கிடப்ப தற்கென்
மனமொப்ப வில்லை மாலா!

விதியிலா நிலையில், வேட்கை
விருப்பிலா நிலையில், வேண்டும்
நிதியிலா நிலையில், பெண்ணோர்
நீசனை மணக்க நேர்ந்து,
மதியிலா மகப்பே றெய்தி
மாண்பிழப் பதினும், மற்றிந்
நதியிலே வீழ்ந்தி றந்தால்
நலமுறும் நமது நாடே!

பண்பாடு படியா ஆண்கள்
பணப்பாடு படிப்போ ராகிப்
பெண்பாடு பிணிப்பா டாகிப்
பிள்ளைகள் பிழைப்பா டாகி,
உண்பாடும் உடலின் பாடும்
ஓய்ந்தநள் ளிரவில் கூடக்
கண்பாடு காணு தின்றிக்
காசினி கலங்கு தன்றோ?

'ஆடவன், ஆற்றல் வாய்ந்த
அறிஞனெங் கிருக்கின் றனே,-
நாடிடின் அதுஞா லத்தில்
நல்லிடம்' எனவே நாட்டி,
ஈடிலா இன்ப மீயும்
இனியசெந் தமிழில், ஔவை
பாடியே வைத்தும், பார்த்துப்
படித்தஆண் யாரிப் பாரில்?

'மேதினி மேல்,பூப் போன்றோர்
மெல்லிய' ரெனவே மேவி,
மாதரின் மனமும், மாண்பும்
மற்றவர் மனமும் மல்கக்
காதலைக் கண்டு காத்துக்
கடிமணங் காணப் பேடிப்
பேதைகள் படிக்கின் றார்கள்
பெண்பார்க்கும் படலம் வந்தே!

ஒருநாள்நாம் வாழ்ந்த போதும்
உளங்கொண்டா ரொருவ னேடு,
திருநாள்போ லெண்ணி நாளும்
திளைக்கலாம்! தெளியான் தேரின்,
வருநாள்க ளெல்லாம் கண்ணீர்
வடிக்கவே வந்து வாட்டும்
கருநாள்க ளாகி வாழ்நாள்
கழித்திடத் தீரும் மாலா!

பொருள்திறம் புரிந்து, போற்றும்
புகழ்திறம் புதுக்கிப் பொய்மை
இருள்திறம் இல்லா தெற்றி,
இல்லறத் திறமி ணைந்து,
மருள்திறம் மாய்த்தோன் கூடும்
மணமாலைக் குரியா ளாயின்,
அருள்திறம் அமைந்த வாழ்வாய்
ஆனந்த முறலா மன்றோ!

துறவிலே தூயோர் சொல்லைத்
தொடியாயும் துலங்கும்; தோலா
அறிவிலே ஆழ்ந்தோர் சொல்கா
தணியாயும் அமையும்; அன்பாம்
உறவிலே உரியோர் சொல்நம்
உடையாயும் உதவும்; உள்ளம்
மறுவிலே மலிந்தோர் சொல்நம்
மகிழ்ச்சியை மாய்க்கு'' மென்றாள்.

''தந்தையுன் நலத்தை நாடத்
தவறினார் போன்றும், தாயாம்
சொந்தவுன் தமக்கை யின்சொல்
சுயநல முள்ள தென்றும்
நொந்தசெம் புண்ணில் கோலை
நுழைத்தாய் நுவலா தே;யுன்
சிந்தையின் சிக்கல், குற்றம்
செயுமிதைச் சீர்தூக்'' கென்றாள்.

''ஊன்றுளித் துளியாய்க் குன்றி
உலரினும், உயிரைப் பேணத்
தேன்றுளி யெனினும் மண்ணைத்
தீண்டிய நீரில் வாயை
வான்றுளி யன்றி யென்றும்
வைக்காது வானம் பாடி!
நோன்றுளி யதுவாய் நானும்
நோற்பவ'' ளென்றாள், நீலா.

சுகத்திலே உதித்தும், சோராச்
சுயமான அறிவால் நீலா,
முகத்திலே முறுவல் மேவ
மொழிந்ததை மாலா கேட்''டுன்
அகத்திலே அமர்ந்த அந்த
ஆற்றல்சா லறிஞன் யாரிவ்
வுகத்திலே அவனெங் குள்ளான்?
உரையடீ உணர!'' என்ருள்.

''ஊக்கத்தை உணவாய் ஓம்பி
ஊட்டுவோன், உலர வுள்ளார்
ஏக்கத்தை யெடுத்து வீசி
எறிபவன், எளியோர்க் கென்றும்
ஆக்கத்தை யறிந்து தேக்கற்
கருள்பவன்,— அவன்தான் அல்லில்
தூக்கத்தைத் தொலைத்தென் நெஞ்சைத்
தொடவுள்ள தோன்ற'' லென்ருள்.

''பெண்ணெனப் பிறந்து, பேதை,
பெதும்பையும் கழிந்த பின்னிம்
மண்ணினில் மாண்பு மிக்க
மங்கையாய் மலர்ந்தால், மற்றிக்
கண்ணனைக் கண்ணால் கண்டு,
கருத்தினுள் வைக்கா தோர்யார்?
எண்ணமொத் திணைந்து வாழ்நீ
இனிதினி!'' என்ருள், மாலா.

கண்ணினைக் கவரும் காட்டுக்
கவின்மயில், களித்துக் காணத்
திண்ணையில் அமர்ந்து தீரத்
திருக்குறள் தேனைத் தேரும்
புண்ணியக் கண்ணன் வாழும்
புகழ்மனை பெரியப் புக்காள்;
எண்ணிய தொன்றை யன்றே
இதயத்தில் பதித்தற் கென்றே

கற்பிக்கும் கால மில்லாக்
காலத்தில் காண வந்து,
சிற்பிக்குச் சிறப்புச் சேர்க்கச்
சீராகத் திகழும் மேனிப்
பொற்புக்குப் பொருந்தக் கண்ணன்
புலனுக்கு விருந்தா மாறவ்
விற்புக்கு நிற்பாட் கேற்ப
எதிர்புக்கு நின்றா னன்றே.

''புள்ளியில் லாமல் பூப்போல்
பொலிகின்ற மானே? பூதக்
கள்ளமில் லாமல் வந்த
கண்ணிறை மணிப்பு றாவோ?
நள்ளிருள் நகர்த்தி, நாடு
நலம்பெற முகிழ்த்த நல்ல
வெள்ளிமீன் தானே? நீலா!
விடியநீ வந்தா'' யென்றான்.

''சுவையெலாம் சேர்க்கச் சொட்டச்
சுந்திரச் சொற்கள் கோத்துக்
கவியெலாம் கவினாய்க் கட்டிக்
கற்கண்டாய் இனிக்கக் கேட்ட
செவியெலாம் களிப்பிக் கின்ற
செம்மலே! சிறக்கச் செப்பும்
அவையெலாம் அன்று நான்;நும்
அன்புமா னவிதா'' னென்றாள்.

முனைத்திடச் செய்து முந்தும்
முறுவலில் மொழிந்த மாற்றம்
திகைத்திடச் செய்து, சேரத்
திருத்திடத் தெளிந்தி டும்முன்
தகைத்திடச் செய்து, தானே
தன்னுணர் வுற்ற தன்பின்
நகைத்திடச் செய்த நல்ல
நாடக மாயிற் றன்றே.

'''மாந்தளிர் மேனி மாந்த
மாமுகில் குந்திற்' றென்னும்
கூந்தலில் முல்லை கோர்த்துக்
கூன்பிறை யெனவே சூடிக்
காந்தமாய்க் காண்பார் கண்ணைக்
கவர்கின்ற கன்னி! உன்றன்
தீந்தமிழ் பேச்சின் றென்னைத்
திகைத்திடச் செய்த'' தென்றான்.

''தாதூட்டி அளிதன் குஞ்சைத்
தாலாட்டும் பொழுது, தாங்கித்
தீதோட்டுஞ் சமரில் வேல்போய்த்
திரும்பிய மகனைத் திட்டி,
'வாதூட்ட வந்தாய்! வாழ்ந்த
வரலாறு வழுவிற்' றென்று,
மூதாட்டி தன்வ யிற்றை
முனிந்ததாய் மொழிந்தீர் முன்னே!

'போருக்குப் போன வீரன்
பொழுதது போயும், பூதான்
சேரிக்குள்' ளென்றோர் செல்வ,
'சிறுவனைத் தந்தோன் செத்தான்;
பாருக்குள் ளிருபே ராறும்
படுமிடம், பகைத்தெ திர்த்த
நீருக்குத் தருவாய் நின்ற
நிலை'யென நெகிழ்ந்தா ளென்றீர்.

'மங்காஇவ் வீரம் தோன்றி
மல்கியே மகிழ்ந்த நாட்டில்,
எங்கேயோ இருந்து வந்தோர்
எண்ணூறு வருடம் ஏறிச்
சிங்காத னத்தில் குந்திச்
செலுத்தின ராட்சி' யென்றால்,
இங்கேயவ் வீரம் என்ன
இயற்றிக்கொண் டிருந்த'' தென்றாள்.

பெண்மகள் கேள்வி, என்றும்
பிறக்காத பெரிய கேள்வி!
''புண்மக ளாகி நொந்து
பொழுதெலாம் புலம்பித் தீர்த்த்
மண்மகள்! எமது மாதா,
மாண்பெலாம் மாய்த்த மாய
உண்மைக ளுரைக்க நேரின்,
உள்ளமே கொதிக்க நேரும்!

ஆரியர், ஆரா யாரை
ஆட்கொளு மகத்த ராகிப்
'பூரியர், புலைய ரென்றிப்
புன்மையைப் பொருத்திப் புல்லாச்
சேரிய ராக்கிச் சேர்த்த
செல்வமும், செருக்கும் மிக்க
வீரியர் தமைப்பொய்த் தெய்வ
வெறியாட்ட மாட விட்டார்.

'நெருப்புதான்—, சைவம்; நேர்ந்து
நினைமினோ' வென்றும், 'நீரின்
பரப்புதான்—, வைணம்; பார்த்துப்
பணிமினோ' வென்றும் பன்னி,
இருப்புதா னின்றித் துஞ்சற்
கிருவேறு செய்தார் நாட்டில்!
விருப்புதான், வெறுப்பாய் வீரம்
வெட்டும்குத் தாகு மாறே!

இல்லாத கோவில் தெய்வம்
இருப்பதா யியற்றி யிங்கே,
பொல்லாத புரோகி தப்பொய்,
பூசைப்பொய் புகுத்தும் போக்கில்,
சொல்லாத கதைசோ டித்துச்
சுவர்க்கத்துச் சுவையுண் டாக்கும்
வெல்லாத வேதப் பாதை
விளைத்ததவ் விழிவு நீலா!

இருமாதம் கூட வேண்டாம்;
இந்தவூ ரியல்பை யேநீ
ஒருமாத கால முற்றோர்ந்
துணருவா யாயின், உள்ள
தருமாதர் மம்பா ராது
தலைதூக்கும் தவறு தண்டா,-
பிரமாத மாயப் பண்டைப்
பீடிப்பைக் காட்டு'' மென்றான்.

## 12 மல்லிகா மலர்ந்தாள்

நீலங்காத் திருக்கு மிந்த
நெடியவான் நிழலில், நீங்காக்
கோலங்காத் திருக்கும் கூத்துக்
குவலயம் கோலி யாக்கி,
மூலங்காத் திருந்தி யங்கும்
முதலிடை கடையில் லாஇக்
காலங்காத் திருத்தற் காமோ?
'கழிந்தபோ தொழிந்த' தென்றே.

'கங்குலும் பகலு' மென்னக்
கழிந்திடும் காலங் கண்ட
'இங்கிதக் குயிலிஃ' தென்ன,
'எழிலன்ன மியங்கிற்' றென்னப்
'பைங்கிளி பயில்வ' தென்னப்
'பார்வதி ஈன்று பையத்
தங்கியே வளர்ந்தா' ளென்னும்
தவமகள் மல்லி காதான்!

குன்றினி லுதித்துக் கோலக்
குவளையில் கண்ணு றங்கி,
ஒன்றுநந் நிலவி லூர்ந்தாங்
கொண்தளிர் மேல்த வழ்ந்து,
முன்றிலில் கமழப் பூத்த
முல்லைப்பா லார்ந்த தென்றல்,
மன்றினி லுலவக் கண்டு
மனமெலாம் மயங்கும் வேனில்!

நெல்லெலாம் வயலில் நின்ற
நிலைநீங்கி, நிறைந்தவ் வூரின்
இல்லெலாம் இருத்தற் கான
இடந்தர ஏற்ற தன்பின்,
சொல்லெலாம் சோர்வு தீர்த்துச்
சுகம்பற்றச் சுடரும் காதல்
புல்லலாம் புளகம் போர்க்கப்
பூத்தனள் மல்லி காவும்!

ஆராயுங் காலிலை 'தோன்றும்
அதிசய மன்றெ'ன் றுலும்,
'பாராளின் மகிழ்ச்சிக் கொப்பப்
பனிமலை' யெனினும் யற்று
தாரார்க ளுவந்து சூழ,
ஒருசடங் கொதுக்கி டாமல்
சீராகச் செய்தாள், செல்வர்
செயத்தக்க தெல்லாம் செய்தே!

நோக்கிற்கு விருந்து, நோற்ற
நுண்ணிடை மகளிர் கூட்டம்;
மூக்கிற்கு விருந்து, மூசும்
முல்லை,மல் லிகை,ரோ சாப்பூ!
நாக்கிற்கு விருந்து, நாடும்
நறியநெய்ப் பண்டம்! காது
தேக்கற்கு விருந்து தீரத்
தெவிட்டாத தமிழ்பா டல்கள்!

கூறுறு சுவைகள் கொண்ட
குறையறு விருந்தில், குந்தி
நூறுறு பேர்க ளுண்ண,
நோக்கொன்ற நுணுகி நோக்கிப்
பேறுறில் லாமற் பெற்ற
பெரியப்பன் மருகி பேதை
ஊறுறு ருத கண்ணன்
உளத்தூன்று மாறு ரைத்தாள்:

''ஏரெங்கே எருதெங் கேயென்
றென்றும்தே டாத்தாய் மாமன்
சீரெங்கே? சீர்ப்பா டான
சேர்த்திகை எங்கே? சேர்ந்த
ஊரங்கே நகைக்க இங்கே
உணவுக்காய் வந்தீ'' ரென்றே,
மாருங்கே ளாஇக் கேள்வி
அழுத்தமாய்க் கேட்டா ளங்கே!

பெண்ணின்சொல் கேட்டுப் பெண்கள்
பிடிப்பாகச் சிரித்தும், பேசாக்
கண்ணனின் கருத்தைக் கண்ட
காளையர், கடியுங் காலங்
குண்ணும்நல் லிணைவும் கூட
உண்மையில் சுவையும் குன்ற,
எண்ணின கண்ணன் ஏற்ப
இயம்பினன், எளிய மாற்றம்:

''பொன்னையோ, புனைக யோ,பூப்
போட்டபொன் வண்ணச் சேலை
தன்னையோ,— தருதல் தக்க
தாகாது! தரணி காண,
என்னையோர் தட்டத் திட்டின்
றெடுத்தொரு பரிசாய்,' என்றன்
மன்னியே! மகிழ நீயே
மல்லிகைக் களித்தி'' டென்றேன்.

'பெரும்போடு போட்டான்; பெண்ணின்
பேச்சுப்பை பிய்ந்து போச்'சென்
றரும்பாடு பட்டா ரன்றங்
கனைவரும், அகம்பீ ரிட்டு
வரம்போடிக் கடக்கும் தத்தம்
வாய்ச்சிரிப் படக்க! வாய்த்த
கரும்பாடிச் சாறு பாகாய்க்
கற்கண்டாய்க் கடித்தார்ப் போன்றே.

''மறிமாறி யூட்ட வந்தால்
மதிமாறும் ஆடும்! மாலை,
தறிமாறிப் பசுவும் தங்கின்,
தடுமாறும் கன்றும்! தந்தை,
குறிமாறிக் குடும்பப் பாங்குக்
குணம்மாறி வழக்கைக் கூட்டி
நெறிமாற, நிறைந்த செல்வம்
நிலைமாற,— நின்றே னின்றே.

'தஞ்சமென் றொருவன் தாளில்
தாழாதான், தாழ்ந்தோர் தம்மை,
வஞ்சமென் றெதுவும் செய்து
வருத்தாதான், வஞ்ச கர்பால்
பஞ்சமென் றிரந்து கஞ்சி
பருகாதான், பகுத்தா ராய்ந்த
நெஞ்சமென் னும்சான் றொன்றை
நீக்காதான் தமிழ' னென்பர்.

'தெருவினில் பசுவின் கன்று
தேர்க்காலில் சிக்கித் தீரச்
செருவினில் கூடச் செங்கோல்
சீர்கெடா தோச்சு வோன்,சேய்
உருவினில் உறுமூ றைத்தேர்
ஊர்ந்துடன் தீர்த்து வைத்துப்
பரிவினில் நீதி காத்தோன்,
பண்புள்ள தமிழ' னென்பர்.

'உதவியின் நிமித்த முற்றோர்
உத்தமி வாழும் வீட்டுக்
கதவினைத் தட்டிக் கண்ட
காரணம் கருதிக் காவல்
விதிவிளை வறிந்து தன்கை
வெட்டியே காத்தான் நீதி;
பதவியில் படிறு பற்றுப்
பழங்காலத் தமிழ' னென்பர்.

சொல்வேறு செயல்வே றான
சூதர்சூத் திரம்சொல் வோராய்ப்
'புல்வேறு, நெல்வே' றென்று
புரியாமல் புதிர்கள் போட்டின்
றில்வீறு குன்றி, வாழ்வில்
இயலாமை, இன்மை,— இன்ன
பல்வேறு துயரில் மாட்டப்
பட்டனன் தமிழன் பாரில்!

முக்தியென் கின்ற பொய்யை
முடிந்துகண் முன்னால் போட்டுப்
'பக்திபா லித்தோர் பங்கு
பற்றுவர் பார்மே' லென்று,
யுக்தியா யுபதே சித்திங்
குழைக்காது பிழைப்பா ரூரார்
சக்தியைச் சதிசெய் தின்னும்
சர்வநா சம்செய் கின்றார்.

சொத்தின்றிச் சுகமு மின்றிச்
சோற்றுக்குத் தாளம் போட
வைத்தென்றும் வருந்த வைத்து,
வயணமாய்க் கர்ணம் வாழ்வில்
மெத்தென்று திண்டில் சாய்ந்து
மேல்மாடி மீதில், 'தென்றல்
சத்'தென்று வாங்கு கின்றான்;
சாகின்றார் தமிழ'' ரென்றான்.

''பாயினைப் பரப்பி விட்டுப்
பாங்காகத் திரும்பென் பக்கம்!
வாயினைத் திறந்தால் மூடும்
வழக்கமும் வேண்டும்; வாடும்
காயினைக் கசக்கிக் காட்டிக்
'கனி'யெனின் கசக்கும் கண்ணா!
தீயினைப் பெய்தாய் காதில்
தீய்ந்திடச் சொல்லாய்த் தேர்ந்தே!

'காட்டிலே வைத்த கண்ணி
கவுதாரிக் கெனக்கா னது,
வீட்டிலே வளர்ந்த கோழி,
விரைந்துபோ யதிலே வீழ்ந்து,
கூட்டிலே உதவி கோரிக்
கூவியே குலைந்த' தென்றால்,
நாட்டிலே வுள்ளோ ரெள்ளி
நகைக்காது தள்ளா ரன்றோ?

'பாசமாய்ப் பரிவாய்ப் பேசிப்
பற்பலர் பொருளைக் கர்ணம்
மோசமே செய்தா' னென்று
மொழிவது முறையா காது;
தேசமே காணத் தேர்ந்து
தெய்வமே அருளைச் செய்யக்
காசுமேல் காசு சேர்த்துக்
கனவானு மானா னன்றே!

'பேசாதே, பெருமை மிக்க
பெரியோர்கள் பேசுங் கால்;வாய்
வீசாதே, விரும்ப வந்த
விருந்தினர் வேட்கை மேல்;கால்
கூசாதே, கொடுத்துக் கொள்ளும்
கூட்டத்தில் குந்தக் கோல்மால்,—
ஏசாதே எதையும் எள்ளி
இகழ்ச்சியா' யெனுமுப் பால்நூல்!

உண்ணுங்கா லுளறு வாயன்
உடனுண்ணல், ஒன்றி வேலை
பண்ணுங்காற் பதறு வாயன்
பாற்பண்ணல்; பதனப் பாங்கா
யெண்ணுங்கா லிளித்த வாயன்
இணைந்தெண்ண லின்ன யாவும்,
அண்ணங்கா லிட்ட மாட்டின்
அவத்தையா'' மென்றா னப்பன்

''நீர்கெட்ட தெதனால்? நீளும்
நிலைநீங்கி நின்ற தால்தான்!
சீர்கெட்ட தெதனால்? சின்னச்
செயல்களைச் செய்த தால்தான்!
போர்கெட்ட தெதனால்? பேயாய்ப்
பேராசைப் பட்ட தால்தான்!
பார்கெட்ட தெதனால்? இந்தப்
பாவிகள் சூழ்ச்சி யால்தான்!

'புள்ளாயி ரம்சூழ்ந் துள்ள
பொழிலெ'னப் பொலியும் பண்ணை!
எள்ளாயி ரம்,நெல் மூட்டை
எண்ணாயி ரத்திற் கேற்பத்
தொள்ளாயி ரம்கா ணிக்குத்
தோப்பொடு நன்செய் புன்செய்,
உள்ளாயி ரங்குற் றங்கள்
உள்ளோனுக் குடைமை யூர்க்குள்!

தெருவினைத் திருத்தம் செய்வோன்
தின்பதற் குணவே யில்லை!
எருவினை யெடுத்துச் செல்வோன்
இடுப்பினில் துணியே யில்லை!
ஒருவினை யுணர்ந்து செய்யா
துண்டுடுத் துறங்கு வோற்குத்
திருவினை யளித்த தெய்வம்
தேசத்து ரோகி யன்றோ?

சொல்லையே சொல்லித் தந்தோம்;
சுவையாகச் சமைத்துத் தின்ன,
நெல்லையே நிறைத்துத் தந்தோம்;
நீடித்து நிலைத்து வாழ்தற்
கில்லையே இருக்கத் தந்தோம்;
இவர் நமக் களித்த தேத்தும்
கல்லையே! அதுவும் நம்மைக்
காசினைக் கவர்வ தற்கே!

'கொடுத்ததைக் கொள்ளான் கோசன்;
'கொள்ளை'யென் றுலகங் கூற
எடுத்ததை விடவும் மாட்டான்'
எனும்பழ மொழியுண் டய்யன்
படித்ததை விட,நான் பாரில்
படித்தநூல் அதிகம்! பாங்காய்ப்
பிடித்திதைச் சாதிக் காமல்
பின்வாங்க மாட்டே'' னென்றான்.

''ஐயப்பா! அதுவுன் ஞய்ந்த
அகத்தெழு மார்வ மாயின்,
மெய்யப்பன் மெலியத் துன்பம்
மேவாது, மெல்லச் சேர்க்கும்
பையப்பன் பாரம் கம்மி
பண்ணுது, பாங்கு பார்த்துச்
செய்யப்பா! 'வேண்டா' மென்று
செப்பேன்நா'' னென்று னப்பன்.

அப்பனின் அசட்டுச் சொல்கேட்
டருகினி லிருந்த ஆண்பெண்
குப்புறக் குலுங்கிக் கூவிக்
'கொல்'லெனச் சிரிக்க லுற்ருர்!
'ஒப்பில்லை இந்தச் சொல்லுக்
குலகத்தில்; உறவென் றுள்ளோர்
தப்பித்துக் கொள்வ தன்றே
தருமமிக் காலத் தென்றே.

சிரித்தஅவ் வோசை சென்று
சிறுகத்தேய்ந் தடங்கும் முன்பே,
தரித்திரம் தனக்குற் றென்னத்
தம்பியைத் தலைமேல் தாங்கி,
வருத்தமும் வாஞ்சை யும்தன்
வதனத்தில் வடிய வந்து,
திருத்தமாய்ப் பகர்ந்தாள், பாராள்
தெளிவான குரலில் தேம்பி!

''காராளர் மரபுக் கேற்பக்
கதிர்விட வளரும் கையின்
தாராளம் முழுது மின்றென்
தம்பிக்குக் காட்டி விட்டார்!
ஏராள மாய்த்தான் போச்சு!
என்னவோ,— கதைசொல் வார்கள்:
'நீராழ மென்ருல், நெய்தல்
நீர்க்குமேல் நீள' மென்றே.

அறங்கூறும் வாயா ரேனும்,
அங்கையைத் திறந்து காட்டார்!
மறங்கூறும் விழியா ரேனும்,
மறந்தும்தம் தலையை நீட்டார்!
திறங்கூறும் நெஞ்சா ரேனும்,
திருத்தமாய்ச் செய்ய மாட்டார்!
குறங்கூறும் கூற கூட்டக்
குணமிது குன்று'' தென்றே.

''அத்தானும், அம்மா ணுந்தான்,—
ஆனநாள் அந்நாள்! இந்நாள்
சொத்தான நாளாய்ச் சொக்கும்
சுயநலம் மிக்குச் சும்மா,
பத்தான் பின்,முன் பார்த்துப்
பதினொன்றாய்ப் பரிவ தன்றி;
ஒத்தான தெல்லாம் செய்ய
உளமொப்பா'' தென்றான், குப்பன்.

''வரவுக்கொத் துறவாய் வந்து
வளருமாம் வட்டிக் காசு!
மருவுக்கொத் துறவாய் மாறி
மணக்குமாம் மருக்கொ ழுந்து!
திரவுகொத் துறவாய்த் தாங்கத்
தாழிசை வருமாம்! தாளாய்க்
குருவுக்கொத் துறவாய் வந்தான்,
குப்பனு'' மென்றான், அப்பன்.

''தறியோட்டி நெய்த சுப்பன்,
தமிழூட்டி நெய்வோ னானான்;
கொறியோட்டி மேய்த்த குப்பன்,
குணமூட்டி மேய்ப்போ னானான்;
நெறியூட்டி நிற்க நெஞ்சில்
நீதியிவ் வூரில் நிற்க,
வெறியூட்டி விட்ட கண்ணன்
விடிவெள்ளி'' யென்றான், செங்கன்.

''சங்கத்தைச் சார்ந்தோ ரின்று
சரிசமத் துவமாய்க் குந்தி
இங்கெமை யெதிர்த்துப் பேசல்
இயல்புதா னெனினும், என்றும்
தங்கமென் றெண்ணத் தங்கித்
தரமறிந் தொழுகி வந்த
செங்கனும் எதிர்த்தா'' னென்று
சிரித்துச்சின் னப்பன் சொன்னான்:

''தாள்பலங் கொண்டு தான்நாம்
தலைதூக்க வேண்டும்; தப்பித்
தோள்பலங் கொண்டு தூற்றத்
தொடங்கினால் துப்பா காது!
தேள்பலங் கொண்ட கர்ணம்
தீண்டினால், சிறையில் தேயும்
நாள்பலங் கொண்ட கம்பி
நாமெண்ண நேரு'' மென்றே,

''கம்பியை எண்ணப் பண்ணல்
கர்ணத்தின் கரும மன்று!
தம்பியும் தமய னும்போல்
தனைநாடித் தருவோர் தப்பை
நம்பியே நலன்பொ லத்தை
நடுநிலை நயக்க நாடி,
வம்புகள் தீர்த்து வைத்தல்
வரன்முறை வைய கத்தே!

வழியினை மறித்'தென் சொத்தை
வைத்திடு கீழே' யென்றே,
கழியினைக் காட்டி, 'இன்றுன்
கடைவாய்ப்பல் உதிர்ப்பே' னென்றே,
'குழியினில் கொண்டு தள்ளிக்
குட்டைகொட் டிடுவே' னென்றே,
பழியினை மிரட்டிப் பேசிப்
பாவியாய்த் தீர்த்துக் கொள்ளேன்!

'மழுங்கிய கத்தி' யென்று
மாற்றூர்கள் மறைவி லேசப்
புழுங்கியே நெஞ்சு புண்ணாய்ப்
புலம்பவும் மாட்டேன்; பொய்யன்
விழுங்கிய விதமே, வீறி
வெளியேற்றி விடுவேன்; வேண்டும்
ஒழுங்கறி வுறுதி,— யாவும்
உளத்தினி லுண்டு கண்டீர்!

கல்லேயே கவணில் வைத்துக்
ககனத்தி லெறிந்த காலே,
'தொல்லேயே தோன்றிற்' றென்று
தூரம்போய்த் துயரத் தோடும்,
'இல்லேயே எனக்குத் தக்க
இடமிங்கே' யெனத் திரும்பி
ஒல்லேயே வுவக்க வந்திவ்
வுலகில்கல் லொன்ற லுண்டே!

கழிக்கெண்டை மீனேக் கௌவிக்
காத்திடும் குஞ்சுக் கூட்ட,
எழக்கண்ட குருகை வல்லா
றொர்திகொண்ட தெனவே, கர்ணம்
அழக்கொண்ட எனது சொத்தை
அழச்செய்து பெறுதற் கான
வழிக்கண்டு கொண்டே னென்று
வாய்திறந் துரைத்தே'' னென்றே.

திருந்திய கருத்தும், தெள்ளத்
தெளிவான முறையும் செப்பி,
வருந்திய தமக்கை யின்நன்
வதனமும் மலர வைத்து,
விருந்தினே முடித்துக் கொண்டு
விரைந்தெழுந் தங்கி ருந்து
பொருந்தவே கழகத் திற்குப்
போய்ச்சேர லானன், கண்ணன்!

'தாமரைத் தேற லாரத்
தவிர்த்ததில் தவளை தங்கித்
தோமுறு பூச்சி தோன்றத்
தொழுதது துணையோ' டென்ன,
தேமுறு தமிழைக் கற்றுத்
திளைத்தலைத் தவிர்த்து விட்டுக்
காமுறு கயமை, கள்ளம்
கருதியே அய்யன் செய்வான்.

மதியிளங் குழவி மாதா
மலைமங்கை மடியில் குந்தச்
சதியுளஞ் சார்ந்து கஞ்சா
சாராய மருந்து வித்தந்
நதியழி கரைமேல் நச்சி
நடந்தனன் சுந்த ரோடும்,
விதியழி விதமவ் வூரில்
வில்லங்கம் விளைத்தற் கென்றே.

'எள்ளுவா ரென்ற எண்ண
மெள்ளள வின்றி ஏகும்
கள்ளர்கட் கிரவில் கண்கள்
கால்களி லுளகா' ணென்ன,
முள்ளுகள், புதர்கள் மூடி
முட்டியை முறிக்கும் மூடாப்
பள்ளங்கள் கடந்து சென்றார்,
பாவிகள் பயமில் லாகே!

ஆற்றரு கமைந்த காட்டில்,
ஆவலாய் வரதப் பன், நல்
லூற்றினைத் தோண்டி, யுள்ளே
ஊறும்நீ ரிறைக்க வோர்சால்
ஏற்றினை யிணைத்து, வெண்டை,
இனியதக் காளி, — யின்ன
மாற்றியே பயிர்செய் கின்ற
மனங்கவர் தோட்டம் புக்கார்.

இன்மான் இவர்கட் குள்ளே
'இணையில்லை இவனுக்' கென்னக்
கனமான கலையைச் சின்னக்
கடுகெனக் கருத்தில் காண,
மனமான மலரில் மாந்தும்
மதுகர மாக்கிச் ''சுந்தா!
அனுமானவ் வனம ழித்த
தறிந்தாயா?'' என்றா னய்யன்,

''ஆகாகா! அறிந்தே னன்றே
ஆடியும் காண்பித் துள்ளேன்;
பூ,காய்,பிஞ் செல்லாம் கீழ்மேல்
புழுதியில் புரளு மாறே,
பாகாக இனித்த தன்றப்
பைம்பொழி லழித்த காட்சி!
நோகாதென் காதில் நூலாய்
நுழைத்தீர் நீர்!'' என்றான், சுந்தன்.

''நாடியிவ் வூரில் நாமந்
நாடகம் நடத்த வேண்டும்;
தேடியவ் விலங்கைத் தீவில்
திருமகள் தனைச்சே வித்து,
நீடியவ் வனத்தை நீக்கும்
நிகரற்ற அனும னய்நீ
பாடியவ் விதம்ந டித்தால்
பார்ப்பேன்நா'' னென்றான், பாவி!

சிறைகூட, தேசப் பற்றில்
சிறந்தவர்க் கொதுக்கச் செய்து,
கறைகூட ஆட்சி காணும்
கட்சிகள் கனக்கும் நாட்டில்,
இறைகூட இலையே! 'ஏற்கா
திச்செய' லெனவும்! ஏமப்
பிறைகூட இலையே! பேசிப்
பிழையிதைத் தடுப்ப தற்கே!

மதுவினில் மனிதத் தன்மை
மறைந்திட மாவாய்ச் சுந்தன்,
இதுவன மன்று தோட்டம்
என்பதூம் எண்ணு தேமுற்
றதஞ்செய்ய லானுன்; அந்தோ!
அய்யன்பா ராட்ட லானுன்:
''புதுவிதம்! சுந்தா! பூண்டாய்
புகழினுக் குரிமை!'' யென்றே.

அக்காளன் ருய்ந்து ரைத்தான்;
''ஐந்நூறு ரூபாய்! அள்ளித்
தக்காளி மட்டும், நாளேத்
தரத்தடை கிடையா'' தென்றே.
தொக்கான பழம்,காய், பிஞ்சாய்த்
துலங்கிய தோட்டம் போச்சின்
'றெக்காலும் எவரும் செய்யார்
இவ்வாறெ'ன் றியம்பு மாறே.

விடிந்தது பொழுது நாளும்
வெள்ளியாய்; விரைந்தெ ழுந்து
நடந்தனர் பழத்தை நாடி
நான்குபேர்; நாச மாகிக்
கிடந்தது தோட்டம்! கண்டு
'கெடுபவர் கெடுத்தா' ரென்று
வடிந்தது கண்ணீர்! செய்தி
வந்ததன் றூரை வைதே!

ஒன்ருர்கள் ஒன்றிச் செய்த
ஊறெலாம் ஊரார் கேட்டுச்
சென்ருர்கள்; செடிகள் பட்ட
சிறுமையைச் சேர்ந்து கண்டு
'கொன்ருர்கள் குடித்த னத்தைக்
கொடும்பாவிப் பயல்கள் கூடி'
என்ருர்கள்; 'எதிரி லின்றிங்
கில்லேயிப் போதென்' ருர்கள்!

'பகையாவான் மனித னன்றிப்
பசு,பயிர், பறவை,— எந்த
வகையாயும் பகையா காது!
வருந்தவே வந்தின் றிந்த
மிகையான செயல்செய் தோரின்
மேல்தோலை உரிக்கோ மாயின்
நகையாகு' மெனவே நல்லோர்
நைந்துளங் கொதிக்க லானார்!

'ஏர்க்கள மிதில்தோய் விக்கே
இடமில்லை' யெனுஞ்சொல் பொய்க்க,
வேர்க்கிளம் பிடவே ளாண்மை
வீணாக, வெறியால் வீழ்ந்த
போர்க்களம் போலா ரண்டு
போனதைப் பார்த்துக் கண்கள்
நீர்க்குள மாகக் கோபம்
நிலைக்களம் நெஞ்சா யிற்றே!

'நேர்ந்ததைப் பற்றி யெண்ணி
நேர்வதை யறித லென்றும்
தேர்ந்தவர் செயலெ'ன் றுய்ந்தோர்
தெரிவித்த கருத்துக் கேற்பச்
சேர்ந்தவர் தமக்குத் தீங்கு
செய்வித்துச் சேர்ந்தோர் தம்மைச்
சார்ந்தவர் மீதில் குற்றம்
சாற்றிடும் சதியிஃ தென்றே,

குப்பனும் குருவும் குந்திக்
குறிப்பாக அய்யன் சூழ்ச்சி
தப்பறப் புரிந்து கொண்டு,
தாமத மின்றித் தாமாய்ச்
செப்புதல் செய்த லின்ன
சீக்கிரம் தெளிந்து சேர்ந்த
அப்பன்க ளனைவ ருக்கும்
அறிவித்து வைத்தா ரன்றே.

தான்செய்த தவற்றைத் தாளுய்த்
தனித்தோர்ந்து கொண்ட சுந்தன்,
'ஏன்செய்தே னிதைநா' னென்றே
இதயம்நொந் திரங்கி யேங்கித்
தேன்செய்த மொழிநீ லாவின்
திருவுளம் பற்று மாறு,
'நான்செய்த பிழையீ தம்மா!
நாய்செய்த வாறு' யென்றே,

மயக்கிய விதம்,தான் கேட்டு
மயங்கிய விதம்,அன் றய்யன்,
இயக்கிய விதம்,தான் ஏற்றங்
கியங்கிய விதம்இஃ தென்று
வியக்கவே விளம்பி, மண்மேல்
வீழ்ந்துவேண் டிடவே, துன்பம்
பயக்கவே கேட்ட நீலா,
'பாவிகா' ளெனப்ப தைத்தாள்.

காட்டிலே கண்ட நட்டம்
கடுகெனக் கருதுங் காலும்,
நாட்டிலே, நடப்பைக் கேட்டோர்
நகுவரென் றெண்ணி நாணி,
வீட்டிலே வரதப் பன்வேர்
விட்டுவீற் றிருந்த வேளை,
கூட்டிலே கண்ணி வைக்கும்
குறவன்போல் வந்தான், அய்யன்.

பானையைத் தூக்கிப் போட்டுப்
பழம்பானை யுடைப்பான்; பற்றிப்
பூனையைத் தூக்கிப் பொல்லாப்
புலிமீதி லெறிவான் போன்ற!
யானையைத் தூக்கி அஞ்சா
யாளிமுன் அலைக்கப் போடு
வானையும், வழக்கம் போல
வரதப்பன் வரவை யேற்றான்.

''சாதியும் மதமும் சாராச்
சமநீதி வழங்கும் சட்டம்!
நீதியைப் பிட்டுக் காட்டும்
நிகரற்ற நியாய வாதி;
சேதியை நேரில் கண்ட
சிறப்பான சாட்சி! சேர்ந்து
வாதியாய் வந்தால் போதும்
வரதப்பா, நீயென் னோடே!

தோட்டத்தைத் தொலைத்துப் போடத்
தோதகம் செய்வோ னுங்கள்
கூட்டத்தி லுள்ளான்; துட்டன்
கொட்டத்தை அடக்கக் கோரின்,
வாட்டத்தை விட்டுப் பூட்டு
வண்டியை வரதப் பா! நாம்
ஆட்டத்தைக் கச்சே ரிக்குள்
ஆடவைத் தவனைப் பார்ப்போம்!

பங்காளி மருதப் பன்றன்
பண்ணையாள், அவன்தா னந்தச்
செங்கனின் மூத்த பிள்ளை
செல்லனை செய்தா னென்று,
கங்குலில் மீன்பி டிக்கக்
கால்வாய்க்குச் சென்ற சுந்தன்
சங்கைக்கே இடமங் கின்றிச்
சாற்றினான், சற்று முன்னே!

வாலாடிற் றென்றால் நம்பும்
வகையாது, தலையா டாது?
'கோலாடி னன்றிக் குட்டிக்
குரங்கதூம் ஆடா' தென்பர்.
'மேலாடி யாவோ னேவ,
மிருகத்தை யொத்த அந்தக்
காலாடி செய்தா' னென்றே
கருதுதல் கருமங் காணாய்!

போனது போயிற் றென்று
போகாம லிருந்தால், பொல்லார்
தானிது போன்று தப்பைத்
தயங்காது செய்தே தீர்வார்!
ஆனது கச்சே ரிக்குள்
அடிநுனி அலசச் செய்தே
நானிது நடத்தி வெற்றி
நாட்டுவேன் நாளைக்'' கென்றான்.

''அழுகியும் போகும் வானம்
அழுதிடின்; அதுவு மன்றி,
முழுகியே போன போதும்,
முறையின்றி முனிந்து முற்றும்
பழகினோர் மேல்பாங் கற்றுப்
பழிபாவம் சுமத்தின், பாரில்
ஒழுகிய ஒழுக்கத் திற்கோ
ஊறாகித் தீரு மன்றோ?

மச்சேறி மணக்க வாழ்ந்து
மகிழ்ந்தவர் மதிமாய்ந் தோராய்க்
கச்சேரி யேறிக் கண்ட
கைம்முடிப் பிழந்து, கண்முன்
குச்சேறிக் கஞ்சி காய்ச்சிக்
குடித்திடும் விதமும் குன்றிப்
பிச்சேறிப் பிதற்றி, யூர்க்குள்
பிறரெள்ள இறந்த துண்டே!

'படிகெட்ட கிணற்றுப் பொந்தில்
பாங்காக வாழும் பாம்பைப்
பிடிகெட்டுப் பற்றின், பின்னல்
பிணமாக வேண்டி நேரும்!
செடிகெட்ட செயலைக் கண்டே
சினந்துகச் சேரி யேறின்,
குடிகெட்டுப் போகு' மென்றும்
குறிப்பிட்டுச் சென்றான் கண்ணன்.

முதிராது போது, காற்று
மோதினும் புளியங் காய்கள்
உதிராது; பழுத்த போதோர்
உதிராம லொன்றி டாது!
பதருது பகுத்துப் பார்த்துப்
பண்ணுவோர் பணிகள் பாரில்
சிதருது; செயல்கள் தெய்வ
சித்தம்போல் நடக்கு'' மென்றான்.

வீட்டுக்கு வெளியே வீற்றிவ்
விவகாரம் விளங்கக் கேட்டுத்
தீட்டுக்குள் ளாயும், தீயாய்த்
தேவாத்தாள் தெளிந்து வந்''தின்
பாட்டுக்குக் காதைப் போட்ட
பாவத்தின் பயனாய்த் தோட்டம்
கேட்டுக்குள் ளாயிற் றின்று;
கேலிக்குள் ளானோம் கெட்டே!

'முன்னாலே செல்லும் முத்தோர்
முறையாக முடுகிச் சென்றால்,
பின்னாலே செல்லும் பித்தோர்
பிழைபடா' தெனவே பேணிப்
பொன்னாலே புனைந்தச் சொல்லைப்
பூட்டினார் காதில்! போதும்!
என்னாலே இனியும் தாங்கற்
கியலாதிவ் விழிவை யின்று.

''எழுந்துபோ அய்யா, நீவந்
திருக்கின்ற இடம்பாழ்! இன்றெம்
கொழுந்தென உள்ள கண்ணன்
கூறினான் குறிப்பிட் டுன்னை!
இழந்தது பெருமை; கூட
எழுநூறு ரூபா'' யென்றே
'பழந்தமி ழணங்கே' யென்னப்
பயமற்றுப் பகர்ந்தா ளன்றே.

'மலைமீதி லிடிக்கு மாறு
மாமுகி லதனைக் கோரத்
தலைமீதி லிடிக்க' தென்னத்
தடுமாறித் தவித்துத் தாமா
தலைமீதி லலையாய்த் தன்கைப்
பலைத்திட, அய்யன் கொல்லன்
உலைமீதி லுமியா யுள்ளம்
உருக்குலைந் துளையச் சென்றான்.

அத்துட னகத்தில் கூட
அச்சமுண் டாகப் பாவ
வித்துடன் விதிநீர் சேர்ந்து
வேர்விட்டு முளையும் விட்டால்,
சத்துடன் சனித்த மேனிச்
சதைவீங்கித் தீரும்! சாகா
தொத்தடம் கொடுக்கக் கூட
ஒருகால்நே ரும்தா னென்றே,

'ஒன்றுமன் றிரண்டு மன்றே,
ஒன்பதைச் செய்து வென்றும்,
இன்றிதில் தோல்வி யுற்றேன்
எத்தனிச் சுந்த ஞல்நான்!'
என்றுநெஞ் சிடிந்தே மாறி
இழிவழி யிரண்டு மய்யன்
சென்றிடு மிடத்திற் கெல்லாம்
சென்றன, சிதைக்கச் சேர்ந்தே!

அறுகரி யரியாய்ச் சால
அடர்த்தியாய் வளர்ந்த ஆற்றின்
மறுகரைக் கல்மேல், சுந்தன்
மனமொன்றிக் குந்தி ஞேஞெய்ச்
சிறுகரும் புழுவைக் கோத்துச்
சீராகத் தூண்டில் வீசிக்
கிறுகிறென் றிழுத்துக் கெண்டை
கெளிற்றுமீன் பிடிக்கக் கண்டான்.

கண்டதும் அய்யன் கன்றிக்
கைதட்டி யழைக்கச் சுந்தன்,
அண்டையில் வந்து நிற்க,
அகமன லாகிப் ''பாவீ!
உண்டவீட் டுக்கு நஞ்சே!
ஊன்றிய காலில் முள்ளே!
முண்டனே!'' யென்றோர் மூச்சு
முறையாக முடித்தான், வைதே!

''சேரியில் கிடந்து சாகும்
செம்மிநாய்ப் பயலே! சேரப்
பூரியும், கிழங்கும் போட்டுப்
பூசித்துப் புசிக்க வைத்தும்,
காரியம் கெடுத்தாய்! காணக்
காட்டியும் கொடுத்தா'' யென்று
வாரியே இறைத்தான், வாய்ச்சொல்
வகைக்கொன்று, வடிவுக் கொன்றே!

''காலையி லிருந்து கஞ்சி
காணாது, காத்தி ருந்து,
வேலையை மட்டும் வேறு
விதியின்றிச் செய்து விட்டு,
மாலையில் சுட்டுத் தின்ன
மடுவில்மீன் பிடிக்கும் போது,
சேலையில் பேனாய் வந்தேன்
சேர்ந்தீர்கள் நீரின் றிங்கே?

நெஞ்சினில் நேர்மை யில்லா
நீசரென் பவர்நீ ரய்யா!
அஞ்சனை யருமை மைந்தன்
அனுமனை யாக்கி யென்னை,
பிஞ்சினை,— பழங்கா யோடும்
பிறர்செடி பிடுங்கச் செய்யும்
வஞ்சனை, தமிழர் தங்கள்
வாழ்வுதாம் வெதிலும் வைக்கார்!

'கஞ்சாகள் வேண்டா' மென்று
கால்தொட்டேன்; கைதொட் டீர்நீர்;
கெஞ்சினேன்; 'குடித்தால் தான்நீ
கேள்;அன்றேல் கீழெ'ன் றீர்நீர்;
அஞ்சாம லயலார் சொத்தை
அழித்திடச் செய்வித் தீர்நீர்;
எஞ்சாத பழிக்குள் ளாக்கி
என்வேரும் அறச்செய் வீர்நீர்!

சின்னம்மா ளிடமிச் செய்தி
செப்பாமல் மறைத்தி ருந்தால்,
என்னம்மா வளர்த்த மேனி
இதற்குள்நாய் நரிகள் கூடித்
தின்னும்மா வாகி எங்கோ
தெரியாமல் கிடந்தி ருக்கும்!
இன்னும்மா புரிய வில்லை
இதுவுமக்'' கென்ருன், சுந்தன்!

''மண்டையில் மூளை யில்லா
மண்டூகப் பிண்ட மே!நீ
பெண்டுக ளிடமிச் செய்தி
பிதற்றலா மோடா!'' என்றே,
துண்டினை யுதறித் தூக்கித்
தோள்மீது போட்டுக் கொண்டு
கண்டபே ருந்தில் குந்திக்
கண்மறைந் தானன் றய்யன்!

## 16 காதல் கனிந்தது!

குழியிலே குவளை தங்கிக்
கோலங்கொள் கிறவூர் விட்டுப்
பழியிலே பாவம் தங்கப்
பண்ணினேன் பறக்கக் கண்ணன்,
மொழியிலே முதுமை தங்க
முகத்திலே இளமை தங்க,
விழியிலே விளக்கம் தங்க
வினைதங்க இருந்தான் வீட்டில்!

ஒழுக்கத்தை உடலா யோம்பி,
உண்மையை உயிரா யூக்கி,
இழுக்கத்திற் கிடமீ யாமல்
எளியோர்கட் கிரக்கம் காட்டிப்
பழக்கத்தில் பண்பை யூட்டும்
பைங்கிளி நீலா, பைய
வழக்கத்திற் கன்று மாறாய்
வாழ்முறை வகுக்க வந்தாள்.

முல்லையின் மணத்தை முன்னே
முன்றிலில் நின்ற னுப்பி,
மெல்லிய லன்ன மென்ன
மென்மெல இயங்கி மேவிச்
சொல்லியல் பனைத்து மோர்ந்து
சுவைபடச் சொல்லுங் கண்ணன்
நல்லியல் மனைக்கு ளத்துள்
நளினம்போல் நயக்க நின்றாள்.

பொருவிலாப் புள்ளி மான்முன்
பொருந்தவோர் பொன்மான் போந்து
வெருவிலா வீட்டி லன்று
விரும்பிநின் றிருத்த லேயோ!
'பிரிவிலா திருந்து பேறு
பெறுகெ'ன வாழ்த்த லேயோ!
விரிவிலாக் கவிதை நூலால்
விளக்குதற் கரிதக் காட்சி!

பிடியினை நடையால், பேசாப்
பிறையினை நுதலால், பின்னும்
கொடியினை இடையால், கூடும்
குயிலினைக் குரலால் வென்றிப்
படியினில் பரவ வாழும்
பைங்கிளி பணிந்து, பாவை
கடையினில் வைத்துக் கண்டாள்,
கண்ணனின் கமலக் கண்ணை.

"தெய்வதம் தேகம் தீண்டித்
திகழ்ந்திட விரும்பித் தீய
பொய்வதம் புரியப் புகுந்தாய்
புகழ்மணம் கமழும் பூவை.
மெய்வதம் செய்யும் மேனியன்
மேனிமேல் சூடல் வேண்டிக்
கொய்வது கூற வந்தேன்,
கோமானே," என்றாள் கோதை!

"நிதிபூத்த மலர்கள் சேர்ந்து
நிறத்திறல் திறனை எய்தும்;
மதிபூத்த மலர்கள் மல்கும்
மணத்திறல் மாண்பை எய்தும்!
எதிர்பூத்த தெளிவு மேற்றம்
எழில்மலை யெய்தும்; நீலா!
விதிபூத்த மலர் நீ! ஊரின்
விடியலாய் விடுக!" என்றான்.

"பால்காவி லிருந்து கங்கை
வரையிலும் வழிந டாத்தி,
வேல்காத லித்த வீர
வேளிர்தம் மகளிர் போன்முப்
பால்காவி லிருக்கை கோலிப்
பழம்புற நானூ றுண்ணுங்
கால்,காத லித்தே னும்மைக்
கவின்விளக் காதற் கென்றே!

கற்றதை யலசி யாய்ந்து
கடைப்பிடித் தொழுகு தற்கும்,
பெற்றதைப் பங்கி யுண்டு
பிறர்நலம் பேணு தற்கும்,
உற்றதை யுணர்த்து மும்மை
உறுதுணை கொளவே வுற்று,
மற்றிதை மறைவொன் றின்றி
மனந்திறந் துரைப்பே னின்றே.

'ஊரின்றி யமையா' தென்பர்
உவந்துநாம் வாழ; ஊரும்,
'பேரின்றி யமையா' தென்பர்
பெருமையெய் திடவே; பேரும்
'சீரின்றி யமையா' தென்பர்
செந்தண்மை யாளர்; சீரும்
'நீரின்றி யமையா' தென்பேன்,
நினைத்தினிப் பார்ப்பீர் நீரும்!

பிறையில்லை யெனின்பின் வானம்
பெருமையைப் பெறுவ தில்லை;
முறையில்லை யெனின்பின் நாட்டில்
முன்னேற்ற மில்லை; ஆண்மை
நிறையில்லை யெனின்வாழ் வின்பம்
நிலையில்லை; நெஞ்சி லேநீர்
சிறையில்லை யெனின்மற் றில்லை
சீவனின் றெனக்கு'' மென்றாள்.

''எழில்தரு முகிலும், ஏங்கி
எதிர்பார்த்துக் கொண்டி ருந்த
பழந்தரு தோட்டம், தோப்பின்
பரிபவம் தவிர்த்தல் விட்டு,
நிழல்தரு மரமொன் றின்றி
நேர்நின்ற குன்றில் நேர்ந்து
மழைதரு மாயின், மற்றிம்
மாநிலம் மனம்நோ மன்றோ?

பெருகவே பெற்று வாழப்
பிறந்தபெண் மணிநீ! பேசி
உருகவே செய்தின் றென்னை
உன்னவ ளாக்கி வாழ்வைப்
பருகவே வைத்தால், உன்றன்
பரம்பரைப் பாங்கு பாழாய்
அருகவே செய்யும் சுற்றம்;
ஆய்ந்ததைப் பாரா'' யென்றான்.

''கெஞ்சியே கேட்கின் றேனென்
கேள், கிளை, கேண்மை, — யாவும்
விஞ்சிய கல்வி, கேள்வி,
விளக்கமு முடைய நீர்தான்!
நெஞ்சினில் நினைத்த தெல்லாம்
நேரிலே வைத்தேன்; 'நீரே
தஞ்சமெ'ன் றுமது தாளைத்
தலையிலும் தரித்தே னின்று!

விடியாவான் றனில்நீர் வேட்கும்
வெள்ளியாய் விளங்க வேண்டிப்
படியாவேன், பாழும் இன்மைப்
பாதலத் திருந்து மீளத்
தடியாவேன், தவறித் தட்டித்
தடுமாற நேரின் தாங்கக்
கொடியாவேன் நான், நீர் கொண்ட
கொள்கொம்பு மாவீ'' ரென்றாள்.

'எட்டாத மரத்தில் விட்ட
இனியமாம் பழமிஃ தென்றும்
கிட்டாத' தென்று விட்டுக்
கிடந்தவன் மடியி லின்று
தட்டாது விழுந்து விட்ட
தால், தின்னத் தகுமா? என்று
கொட்டாது விட்டான் கண்ணைக்
கூர்ந்துற்றுப் பார்த்த வாறே!

'மனமெனும் மனைக்குள் மங்கா
மதிவிளக் கேற்றி, மாருக்
கனவெனக் கருதிக் காத்த
கவின்மிகு காதல் பூத்து,
நனவெனக் கமழ்ந்த' தென்றே
நகைமுகம் நயந்து காட்டிப்
புனிதனும் புகன்ருன்: ''நீலா!
புகழ்மணம் புரிவோ'' மென்றே.

விதிமுகங் கண்டு கொண்ட
வென்றியால், விரிந்த வான
மதிமுகங் கண்டு கொண்ட
மணங்கமழ் குவளைக் கண்ணுள்,
பதிமுகங் கண்டு கொண்ட
பரவசம் பருகப் பண்புச்
சதிமுகங் கண்டு கொண்ட
சாந்தியுட் கொண்டான் கண்ணன்!

நல்லதோ, அல்ல தோவூர்
நடுவினில் நயந்து நின்று
வல்லதாய்ச் சொல்லக் கேட்டு
வதந்திக்கு வண்ணங் கூட்டி,
இல்லெதா யிருந்த போதும்,
இசைவாக இருப்போர் காதில்
சொல்லதாய்ச் சொரியா வோரூர்
சுவர்க்கத்தி லெனினு முண்டோ?

'எய்துவ தெல்லா மொன்றாய்
இணைந்தெய்து மின்ன' லென்னச்
செய்தியாய் இதுவும் வந்து
சிந்தாது செவியிற் சேர,
'உய்தியொன் றுண்டோ உற்ற
ஊரிலெ'ன் றுள்ளும் நொந்து,
வெய்துயிர்த் தழுதாள், சீதா
விழியில்நீர் ஒழுக விட்டே!

சாத்திரம், சம்பிர தாயம்
சந்தியில் சிந்திச் சத்துப்
பாத்திர மாகி வந்த
பாவையைப் பார்த்துச் சீதா,
''நேத்திரம் நிலைக்கு மாடீ!
நெறிகெட்ட நீலீ! நீசச்
சூத்திரன் தனக்கா மாலை
சூட்டிடத் துணிந்தாய்? தூ தூ!

பிறந்துநீ வளர்ந்த வீட்டுப்
பெருமையும் மிஞ்சு மாடீ!
சிறந்தநம் தந்தை மானம்
சிந்தவா செய்கின் றாய்? சீ!
இறந்துநீ ஒழிந்தால் கூட
இரண்டுநாள் துக்கம்! எல்லாம்
அறிந்துரைக் கின்றே னுன்றன்
அக்காநான், அடியே நீலா!

சுகத்தினை மூடி வைத்துச்
சுவைத்திட வேண்டின், சோரும்
அகத்தினை மூடி வைத்தற்
கறிந்திட வேண்டும்; அன்றேல்,
சகத்தினை மூடி வைக்கும்
சாத்திய மற்ற தால், நாம்
முகத்தினை மூடி வைக்கும்
முறையுரு வாகித் தீரும்!

காதலும், கலப்பும் கட்டுக்
கதைகட்டிக் கதைப்போர்க் கன்றி,
வேதியர்க் குதவா! வீட்டை
விட்டினி வெளியே ருதே!
'நீதிக்காய் மாலா நீயும்
நெஞ்சிலே நிறுத்தி வைஇச்
சேதியை'' எனச்சே வித்துச்
செலவிட்டே னவளை'' யென்ருள்.

''போருக்கு வரிந்து கட்டிப்
புறப்பட வேண்டாம் சீதா!
நீருக்குப் பதிலாய் நிற்க
நிழல்கேட்கும் செடியொன் றில்லை!
ஊருக்கு நீசெய் கின்ற
உபதேச முருப்ப டா! நான்,
நேருக்கு நேராய் நின்றென்
நினைவொன்ற வாழ்வே'' னென்ருள்.

கயல்போலும் கண்ணி நீலா
கனிவாய்நின் றுதிர்ந்த இச்சொல்,
அயில்போலும் கண்ணில் கோப
அனல்கக்க வைக்க அக்கா,
புயல்போலும் பாய்ந்து தங்கை
பூப்போலும் கன்னம் வீங்க,
''வெயில்போல எரிக்கும் சொல்லை
விளம்பாதே'' என்ற றைந்தாள்.

''படிக்கின்ற பகவத் கீதைப்
படிப்பினைப் படிநீ யென்னை
அடிக்கின்றாய் போலும் சீதா!
ஆயினும் பரவா இல்லை!
நடக்கின்ற திரும ணத்தில்
நயந்துநீ எனக்கு நாளை,
கொடுக்கின்ற பரிசா யேற்றுக்
கொள்கின்றே னிதனை'' யென்றாள்.

செந்தமிழ் சிறக்கக் கற்றுச்
செய்வன திருந்தச் செய்யும்
சொந்தத்தன் தங்கை சுட்டிச்
சுருக்கெனக் கூர்ந்து சொன்ன
இந்தச்சொல், — எழில்த மிழ்ச்சொல் —
இதயத்தி லெறிவே லாகி,
வெந்தபுண் ணில்தைத் தென்ன
வேதனை யுற்றாள் சீதா!

''என்னாலே என்றும் தீங்கொன்
றேற்படா துனக்குச் சீதா!
உன்னாலே எனக்கும் தீங்கொன்
றுண்டாகா தெனினும், கன்னம்
முன்னாலே மூடிக் கொண்டு
முடிவாகச் சொல்வேன்: அத்தரன்
தன்னாலே தளிர்க்கும் தீமை
தனில்பாதி உனக்குண்'' டென்றே.

''தீமையாம் அத்தா னும்! நீ
தெரிவிப்ப தென்ன டீ! இச்
சீமையே அமர்ந்து கேட்கும்
சீராமன் கதையைச் செப்பின்!
ஊமையும் கூடக் கேட்டால்
உபதேசம் புரிவோ னாவான்!
ஆமையே! முயலி னாற்றல்
அறியாய்நீ அடியே!'' என்றாள்.

வெறுப்புடன் விரவி வெட்கம்
வேதனை வெளியில் பீறப்
பொறுப்புடன் புகன்றாள் நீலா:
''பொய்ப்புகழ் புதுக்க வேண்டாம்!
பிறப்புடன் கலக்கப் பெற்ற
பிரா மணத் தந்தி ரங்கள்
இறப்புடன் போரா டிக்கொண்
டிருக்கின்ற தறிநீ!'' யென்றே.

''தந்திரம் தவித்து நாசம்
தானுகி விடட்டும்! தாங்குப்
மந்திரம் கூடச் சேர்ந்து
மடியட்டும்! மனிதர் மாறி
எந்திர மாகட் டும்! நாம்
என்றென்று மிருந்து வாழத்
தொந்தர வில்லை! துய்க்கத்
தோப்புண்டு, துரவுண்'' டென்றாள்.

''துரவுண்டு, தோப்பு முண்டு;
துணையாகச் சுந்த னுண்டு;
வரவுண்டு; செடிகள் வைத்த
வரதப்பன் தோட்ட முண்டங்
கிரவுண்டு; பிடுங்கி வீசி
எவர்மீதோ பழியைப் போடும்
கரவுண்டு; கண்டால் சிந்தக்
கண்ணீருண் டுனக்கிங்'' கென்றாள்.

''நாசமாய்ப் போக! உன்பொய்
நாவறுந் திடுக! 'நம்மை
ஏசுமே ஊரே கூடி'
என்பதை எண்ணு தின்று
பாசமே அறுத்தாய். கெட்டுப்
பாழாகிப் போமா றந்தோ!
தேசமே! தெய்வ மே! கண்
தெரியாதோ உங்கட்'' கென்றாள்.

''சொல்லக்கேள் சீதா! சும்மா,
சுயபுத்தி யின்றிச் சொல்லால்
கொல்லப்பார்க் காதே என்னை!
கொல்லையி லிருப்பான் சுந்தன்;
மெல்லப்போய் நீயே மெய்பொய்
மிகைகுறை யின்றிக் கேட்டு,
நல்லது பொல்ல தோர்ந்து
நடந்துகொள்'' என்றாள், நல்லாள்!

'என்தப்பும் உனது தப்பும்
இதிலினித் தெரியு' மென்றச்
சந்திப்புக் கெழுவே சீதா,
'சரசர' வென்றப் போதச்
சுந்தப்பன் வந்து நிற்கச்
சுருக்கெனக் கடிந்து சொன்னாள்:
''சிந்தப்பா வரதப் பன்றன்
செடிபற்றிச் செய்தி'' யென்றே.

''ஆவலோ டய்யர், அன்றங்
கடியேனுக் காணை யிட்டார்:
ஏவலன் மறுத்தற் கேலா
தென்னநா னிதயத் தெண்ணிக்
கோவிலின் தெய்வத் திற்கோர்
கும்பிடும் போட்டுக் கூனித்
தாவினேன் அனும னாகித்
தக்காளி தொலைந்த'' தென்றான்.

மடலெலாம் வாழை யாகி,
மருங்கெலாம் கரும்பாய் மல்கித்
திடலெலாம் தென்னை யாகித்
திகழ்கின்ற திருவூர்க் குள்ளே,
உடலெலாம் உருகிக் குன்ற
உளமுடைந் தொழுக, ஊத்தைக்
குடலெலாம் தெறிக்கக் குந்திக்
குமுறினாள் குலைந்து சீதா!

மூக்கினைக் கவர முல்லை
முகைமலர்ந் திடவும், மூசி
யாக்கையைக் கவரத் தென்றல்
அசைந்தடுத் திடவும், வெய்யோன்
நோக்கினைக் கவர வானம்
நோற்றுமெய் சிவக்கக் கர்ணம்
நாக்கினைக் கவரக் காய்கள்
நதிதாண்டி நடந்து வந்தான்.

சொத்தையோ சுளுகோ சூழாச்
சுவைமிகுந் துள்ள நல்ல
கத்தரிப் பிஞ்சு கொஞ்சம்;
கறிவேப்பி லைக்கட் டொன்று;
சத்துள்ள முருங்கை யோடு
சாம்பல்பூ சுணியுஞ் சேர்த்து,
முத்தனே சுமந்து கொண்டு
மூகனாய் வந்தான், முன்னால்!

காலத்தை வீண்பண் ணாது
கருத்தினைப் பணியில் வைத்துச்
சீலத்தைப் பேணும் செல்வி
சீதாவைக் காணோம்; வாசல்
கோலத்தைக் காணோம்; பேரக்
குழந்தைகள் கூடக் காணோம்;
நீலத்தைக் காணோம்; சுந்தன்
நிலைப்படி யருகில் காணோம்!

வாசலில் வந்து நின்ற
வசங்கெட்ட கர்ணம் வாயால்,
'தேசிகா!' என்று தேன்போல்
தீங்குரல் தெளித்தான்; தீரக்
'கோசலா!' என்று கூட்டிக்
கொட்டினான் குரலை! கூடப்
பேசுவா ரின்றி நின்று
பெருமூச்சு விட்டான் பின்பு!

முன்புறம், மாலா வீட்டு
முன்றிலில் நின்ற நீலா,
பின்புறம் பிரிந்த பின்னல்
பிரமீளா பிடித்தி ழுக்க,
அன்புறும் அக்கா ஈன்ற
தனைத்தையும் அழைத்துக் கொண்டு,
துன்புறும் தந்தை கண்முன்
தோன்றிட வந்தாள், தொய்ந்தே!

'சின்னம்மா வந்தா' ரென்றே
சேகரம் செய்த வற்றை,
மன்னும்மாத் தண்டல் முத்தன்
மகிழ்ந்துவைத் திடுமுன் அய்யன்,
பன்னும்மா றுரைக்குப் பாவம்
பலியாவ தோரா தன்று,
''என்னம்மா நீலா! வீடேன்
இருள்மூடிக் கிடக்கு?'' தென்றான்.

''தோட்டங்கள் தோறும் போய்ப்பொய்த்
தோத்திரம் செய்து தோதாய்
நாட்டுக்காய் கறிகள் வாங்கி
நலுங்காது கொண்டு வந்து
போட்டுக்கொண் டிருக்கின் றீர்; நீர்
போயுள்ளே அமர்ந்து மெல்ல
வீட்டையே கேட்டா லெல்லாம்
விளம்பிடும் அப்பா!'' என்றாள்.

'ஏச்சுற்றுத் தனது கோட்டை
இடிந்தின்று வீழ்ந்த' தென்று
மூச்சற்றுக் கிடந்த சீதா,
முனகிக்கொண் டெழுந்து, முன்னால்
பேச்சுற்றுக் கேட்ட வாறே
பேதுறு மாறு வந்தும்,
நாச்செற்றுப் போக யாதும்
நவில்வதோ ராது நின்றாள்.

'விடிந்தபின் விளக்கம் விட்ட
வெண்மதி' யெனநின் ருளை,
நடந்ததை அறியா அய்யன்
நாத்தடு மாறக் கேட்டான்:
''கடிந்ததார்? உனது கண்ணில்
கலக்கமேன்? சீதா! நெஞ்சம்
இடிந்திட நேர்ந்த தென்ன?
இயம்படி அம்மா!'' என்றே.

''அடுக்கக்கூ டாத யாவும்
அடுத்ததின் றப்பா! நாளை
நடக்கக்கூ டாத யாவும்
நடந்திடக் கூடு'' மென்றன்
றெடுக்கக்கூ டாது சேர்ந்த
இழிவழி விடையூ றின்ன,—
வடிக்கக்கூ டாத கண்ணீர்
வடிந்திட வடித்தாள் சீதா!

காலாலே நடக்கா தென்றும்
கையாலே நடந்த கர்ணம்,
ஆலாகிக் கிளைத்தான் மேலே!
அறுகாகித் துளைத்தான் கீழே!
''நீலாவுன் நினைவை மாற்றி
நெறியறிந் தொழுகி னன்றி
மேலான நமது சாதி
மேம்பாட்டிற் கழிவு நேரும்!

'''எனக்காக வாழ்ந்த நாட்கள்
எல்லாமும் இழிநா' ளென்னத்
தனக்காக வாழ்ந்தி டாது,
தழைத்தது பூத்துக் காய்த்துக்
கனிக்காக வாழ்ந்தும், கண்டோர்
கல்லடிக் குற்ற மாப்போல்,
உனக்காக வாழ்ந்தொவ் வொன்ரு
யோடிற்றென் வாழ்நாள் நீலா!

நீராட்டித் துவட்டி யுன்னை
நேர்த்தியாய் மடியில் வைத்துச்
சீராட்டிப் பாலு மூட்டிச்
'செல்வமே' யெனத்தா லாட்டிப்
பாராட்டி வளர்த்தே னுன்தாய்
பரலோகம் போன தன்பின்!
வேராட்டி விடவேண் டாம்நீ
வேதனை விளைத்தற் கென்னை!

மாரைவிட் டானின் பிள்ளை
மருதப்பன்,— அவனை மற்'றிவ்
வூரைவிட் டோட்டு வே'னென்
றுரைத்துவிட் டுன்னத் தானும்,
சீரைவிட் டுள்ளங் கெட்டுச்
செப்பாது சென்று விட்டான்.
நேரைவிட் டினிநீ சென்றால்,
நிலம்விட்டுச் செல்வேன் நானும்!

கூடாது குழந்தாய்! குன்றாக்
கோத்திரம் குற்றம் நேரக்
கூடாது குழந்தாய்! கொண்ட
குலத்தினுக் கிழிவு நேரக்
கூடாது குழந்தாய்! கூசக்
குடும்பத்தில் குலைவு நேரக்
கூடாது குழந்தாய்!'' .. என்னக்
கூடாதாள் கூறிக் கொண்டாள்:

''ஒத்தான உதவிக் கொட்டி
உமைநம்பி ஒழுகி னோர்தம்
சொத்தான தனைத்தும் கூட்டிச்
சுளையாக்கி விழுங்கு முங்கள்
சத்தான சதியால் கூடச்
சாராத சமர்த்துச் சாதி;
அத்தானின் அழிம்பாட் டத்தில்
அழியாத அருமைச் சாதி!

தீதினைச் சிந்தை யாலும்
தீண்டுவ தறியாச் செம்மல்;
நூதன நூல்க ளாய்ந்த
நுண்ணறி வுடையோன்; நோற்கப்
போதனை புரியும் பொய்யாப்
புலவனை மணந்தால் நான், 'நம்
சாதிபோய்ச் சாகு' மென்றால்
சகம்சாந்தி யெய்திற் றப்பா!

வான்பெறும் மதிபோ லன்றி
வளர்ந்திடும் மதிபெற் றானை,
கான்பெறும் நதிபோ லன்றிக்
கருணையாம் நதிபெற் றானை,
தேன்பெறும் பொதிபோ லன்றித்
தீந்தமிழ் பொதிபெற் றானை,
நான்பெறும் நிதிபோ லன்றி
நலந்தரும் நிதியாய்ப் பெற்றேன்.

மண்ணினி லாணும் மற்றிம்
மறையவர் மரபில் தோன்றிக்
கண்ணனின் கமுகந் தோப்பைக்
கைப்பற்றிக் கொண்டீர்! உங்கள்
பெண்ணெனப் பிறந்த நான், அப்
பெருமையை இரட்டிப் பாக்கக்
கண்ணனை யேகைப் பற்றிக்
களிக்கின்றேன், அப்பா!'' என்றே.

''எய்வதின் றென்கை யம்பை
எடுத்துநீ என்மீ தென்றால்,
தெய்வசங் கல்ப மென்றே
தெளிவது தவிர்த்து, வேறு
செய்வதற் கில்லை! செய்; உன்
சிந்தையொத் திருந்து, சீராய்
உய்வதுன் பொறுப்பு! தெய்வம்
உறுதுணை யாக!'' என்றான்.

'என்னையே எதிர்பார்த் துக்கொண்
டிருக்குமென் இன்ப மே! நான்
சென்னையி லுள்ளேன்; எல்லாம்
சேமந்தான்; தெரிவி சேமம்!
அன்னைசீ தாகல் யாணம்;
அகலிகை சாப நீக்கம்
முன்னையெங் கும்கேட் காத
முறையிலே பிரசங் கித்தேன்.

செயிரிலா நாற்றங் காலில்
செந்நெல்லைத் தூவிச் செய்த
பயிரலா தொப்பொன் றில்லாப்
பச்சிளம் மக்கள், — தாய்நீ!
துயரிலா திருக்கத் தெய்வம்
துணையுள தெனினும், நானிங்
குயிரிலா திருத்தல் லொத்த, —
ஒருகுறை யுளதுள் ளத்தே!

'செல்லவே வேண்டாம் நீரிச்
சென்னையை இனிவிட்' டென்று
சொல்லவே செய்கின் றூர்கள்,
சொல்லருஞ் செல்வர்; சும்மா
மெல்லவோ, விழுங்க வோநான்
மெத்தன மாக வுள்ளேன்:
ஒல்லவே சீதை காதைக்
கொருநாளும் ஓய்வே இல்லை!

யுக்திதான் எனது சொத்தின்
றுண்மையை உரைத்தால்; இங்கே
முக்திமேல் முடிவில் லாத
மோகங்கொண் டுள்ளார் மூண்ட
பக்தகோ டிகள்;பண் பாட்டில்
பரவசப் பட்டுத் தத்தம்
சக்திக்கு மீறிச் செய்வர்
சன்மான மெனக்குச் சீதா!

இன்னொரு சின்னச் செய்தி,—
இனிப்பான செய்தி சீதா!
'மன்னவன் பணியன் ருயின்,
நின்பணி மறுப்ப ஞே?என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்ரே?'
என்னுமிப் பாட்டிற் கேற்ப
இரண்டுரை செய்வே னின்று!

ஆசி ரா. சா. சி. கூற,
'ஆவி'யா சிரிய ராரார்
தேசிக னெனது மேதைத்
திறத்தினை வியந்து தீட்ட,
மாசிலா மணிபொன் ஞடை
மாண்புறப் போர்த்த,— யாவும்
பேசியா யிற்று; சீதா!
'பேப்பரி'ல் படிப்பாய் நீயும்!'...

வாசிக்கும் வரியொவ் வொன்றும்
வனிதையின் வருத்தம் போக்கக்
கூசிக்கொள் வதற்கு யாதும்
குறையில்லை இனிமேல்! கூடக்
காசுக்கும் கவலை யில்லை
கணவனுக் கெனவே சீதா,
யோசிக்க லாஞள், 'தெய்வம்
உண்டுநம் பக்க' மென்றே.

## 20 இளையரின் எண்ணங்கள் 

ஞாயிற்றுக் கிழமை; கொஞ்சம்
நலமான நாளாய் வந்து
போயிற்று; குழந்தை குட்டி
புசித்துவிட் டயர்ந்து தூங்க
லாயிற்று; சீதா, ஆராய்ந்
தாறுத லுற்ருள்; அய்யன்
பாயுற்ருன்; நீலா, வாழ்வைப்
பற்றியா ராய லுற்ருள்.

'பயிரிலே மறைந்தி ருக்கும்
பாங்கொடு பயிர்ச்சீ வன்கள்!
தயிரிலே மறைந்தி ருக்கும்
தனியுண வான வெண்ணெய்!
துயரிலே மறைந்தி ருக்கும்
துலங்கொளித் தொகுதி! தொட்டென்
உயிரிலே மறைந் திருப்பான்
உணர்வுரு வொளியாய்க் கண்ணன்!

குடலெலாம் குலுங்க அப்பா
குமுறட்டும்; கூடக் குந்தி
உடலெலாம் உலுங்கச் சீதா
ஒப்பாரி வைக்கட் டும்; நான்
கடலிலே கலக்கச் செல்லும்
காட்டாறு புரையும் சொத்தைத்
திடலாகித் தடுத்துத் தேக்கித்
தேசத்திற் குதவச் செய்வேன்.

நன்செய்நா னூறு காணி;
நாற்பது காணித் தோப்பு,
புன்செய்மற் றுள்ள சொத்து
பூராவும் பொதுமை யாக்கி,
அஞ்சியே அடிமை யாய்இங்
கருந்திடக் கஞ்சி யின்றிப்
பஞ்சையா ளோர்க்குப் பங்கிப்
பரவசப் படவைக் கின்றேன்!

'எண்ணின்ன, எழுத்து மின்ன,
எழுதுநூற் பொருளு மின்ன,
மண்ணின்ன, மனித ரின்னர்,
மாண்பின்ன' தென்னப் பன்னும்
கண்ணன்ன கண்ணன் றன்னைக்
கணவனாய்க் கைப்பற் றும்நாள்,
'பெண்ணின்ன' ளென்று பேசிப்
பிரமித்து நிற்கு மாறே.

ஓதலில் ஓர்ந்த உண்மை
உள்ளமுட் கொண்ட தாயின்,
காதலன் கண்ண னாயின்,
கடமையில் கருத்து மாயின்,
சாதலில் முடியும் வாழ்வு
சாந்தியில் நிலைக்கு மாயின்,
ஈதலுக் குரிய நானும்
ஏற்பதற் குரிய ளாவேன்.

'தாகமே' எனவான் நோக்கித்
தவிக்கின்ற தரணி எங்கும்,
ஏகமாய்க் குளிர்ந்து தண்ணீர்
இதமாகப் பரவிப் பாய,
மேகமா யிடித்து மின்னி
மிகுமழை பொழிய என்னு
லாகுமே லதுவே வாழ்வின்
அரும்பய னாகு மன்றோ!

பெண்ணாகி, ஆணு மாகிப்
பிறந்துள்ள பிழைப்பில் லார்க்குக்
கண்ணாகி அமைந்து கண்ணன்,
காதாகி அமைந்து நானும்,
புண்ணாகி யுள்ள புன்மைப்
பூராவும் போக்கி, மக்கி
மண்ணாக, மணக்கப் பூத்த
மல்லிகை வாழ்வாக் கேமோ?

என்னை நா னீந்து, மற்றென்
ஈகைக்குக் கைம்மா றாகத்
தன்னைத்தா னெனக்கு நல்கத்
'தம்பதி' யெனவே தங்கி,
முன்னையும் பின்னு மில்லா
முறையினி லூரைப் பேணும்
அன்னையும், அப்ப னையும்
அவனியில் வாழ்வே'' மென்றே.

'எண்ணறக் கற்றுச் சால
எழுத்தற வாசித் தாலும்,
பெண்ணறி வென்ப தென்றும்
பேதமைத்' தெனவே பேசி,
மண்ணினில் மகளிர் மாண்பு
மணமறு மாறு செய்த
திண்ணிய னைப்பெற் றுளித்
தேசத்தி லொருபெண் தானே.

சேலான விழிக்கோ, சேர்ந்த
சிற்றிடை தனக்கோ, செம்மை
மேலான,— மிடுக்கு மிக்க—
மென்றளிர் மேனிக் கோ, என்
தோலாத தூய உள்ளம்
தோற்றிட வில்லை! தோகை
நீலாவின் உண்மை யன்பு
நெறியன்றோ வென்ற தென்னை!

நோற்றவள் நீலா வன்று;
நுணுகியா ராயின், நொந்து
சேற்றிலே கிடந்த என்னைச்
செந்தளிர்க் கைகொ டுத்துப்
பேற்றிலே பெரும்பே றெய்திப்
பேணவே எடுத்தாள்; பேரா
தாற்றிலே அமைந்து சால
அருமையாய் நோற்றேன் நானே!

நீலாவென் றெண்ணு மிந்த
நிலையான நினைவென் நெஞ்சில்!
நீலாவென் றியம்பு மிந்த
நெட்டெழுத் திரண்டென் நெஞ்சில்!
நீலாவென் றழைக்கு மிந்த
நிதியான பெயரென் நெஞ்சில்!
நீலாவென் றியங்கு மிந்த
நிகரிலா உருவென் நெஞ்சில்!

உடையிலே உடலை வைத்தாள்;
உலகுபின் பற்றத் தக்க
நடையிலே நலனை வைத்தாள்;
நகில்களைச் சுமந்தி ளைத்த
இடையிலே எழிலை வைத்தாள்;
இமைத்திடுங் குவளை யீர்ங்கண்
கடையிலே கருணை வைத்தாள்;
காதலை வைத்தா ளென்மேல்!

மேலான நூல்கட் கெல்லாம்
மேலாக மேன்மை மேவி,
'நீலா!ஓ நீலா! நீயென்
நெஞ்சிலே நிலைத்து நின்றாய்!
மாலாக வேநீ என்னை
மாற்றினாய்! மணக்கா மற்றான்
ஏலாதிங் கினியென் றலென்
றெண்ணமிட் டிருந்தான் கண்ணன்.

குருதியோர் பந்தாய் வானில்
கோலங்கொண் டெழுந்த தென்னப்
பருதியு மெழுந்தான்; கண்ணன்
படுக்கைவிட் டெழுந்தான்; பின்னை
கருதிய தடையக் கண்முன்
கதவினைத் திறந்து கொண்டு,
'வருதுயர் தவிர்க்க வந்த
வானமிழ் தெனவே, வந்தாள்.

''கிஞ்சித்தும் கேண்மை யில்லாக்
கிளி! உன்னை இரவி லென்றன்
நெஞ்சகத்துள் வைத்த வாறே
நெட்டுயிர்ப் பெறிந்து கொண்டு,
மஞ்சத்தில் மடிந்தி ருந்தேன்
மலர்ந்தகண் மாற்ற மல்! நீ
வஞ்சித்து விட்டெவ் வாறாய்
வந்தனை வெளியே'' என்றான்.

இருவரா யிருந்தும் காதல்
இதயங்க ளிரண்டு மொன்றி
ஒருவரா யிருந்தாற் போலன்
றுணர்ந்துபே ருவகை யுற்றுப்
''பிரிவிலா திருந்து வாழப்
பெறுமொரு திருநாள், பேண
வருவதா யறிந்தேன்; வந்தேன்;
வழிதிறந் திருந்த'' தென்றாள்.

''அத்தானும் கதிரோ னென்ன
அகம்விட்டு மறைய, அன்றே
முத்தான தமக்கை யின்வாய்
முளரிபோல் மூடிக் கொள்ள,
பித்தான அப்பா செய்த
பிழை,பிணிப் பறுக்க உங்கள்
சொத்தாக முடிந்த'' தென்றே
சுவைசொட்டச் சொன்னாள், நீலா!

''என்சொல்லி மகிழ்வேன் நானென்
இதயத்தி னெழில்வி ளக்கே!
வன்சொல்லில் லாம லாய்ந்து
வருங்காலம் வகைப்ப டுத்தி,
இன்சொல்லில் தேனும் பாலாய்
என்செவி குளிரப் பெய்த
உன்சொல்லுக் கொப்பச் சொல்ல
உளத்தினி லொருசொல் காணேன்!

நிற்கண்ட ஞான்றே நெஞ்சில்
நிலைகொண்டா யெனினும், நீல
விற்கெண்டை புருவம் கண்ணாய்
வெண்முல்லை பல்லாய், வெள்ளைக்
கற்கண்டைக் கைப்பிக் குஞ்செங்
கனியிதழ் சிந்து மிந்தச்
சொற்கண்ட இன்றே காதல்
சொர்க்கத்தின் சுவையைக் கண்டேன்.

நதியுண்டிவ் வூரில், முல்லை
நறுமண முண்டு; நல்ல
மதியுண்டு; மாலைப் போழ்தில்
மந்தமா ருதமு முண்டு!
சதியுண்டு வீட்டில்! காதல்
சமத்துவ மதுவுண் டாயின்,
நிதியுண்டு கொல்லோ வேறு
நினைவுண்டு பண்ணற்'' கென்றான்

வளர்ந்ததன் அன்பைக் கண்ணன்
வார்த்தையாய் வடிக்கக் கேட்டாள்;
மிளிர்ந்தன கண்கள்! நெஞ்சில்
மின்னல்வெட் டிற்று; மேனி
குளிர்ந்தது; முறுவல், வெட்கம்
கொஞ்சம்பொய்க் கோபம் கூடித்
''தளர்ந்ததென் இதயம்! தாங்கேன்,
தவிர்கஇத் துதிக'' ளென்றாள்.

''பேச்சுடன் பேச்சு மேலும்
பேசிட வேண்டா மாயின்,
கூச்சிடு கின்ற கொவ்வைக்
குவியிதழ் மதுவைக் கொஞ்சப்
பூச்சிடும் படியாய் வைத்துப்
புலனுறு மாருய்க் கட்டி
மூச்சுடன் முகர மூச்சு
முத்தமொன் றளிநீ'' யென்ருன்.

தாங்கிக்கொண் டிருந்த பெண்மைத்
தனமெனும் கன்னித் தாட்பாள்,
நீங்கிக்கொண் டதனுல், நீலா
நெகிழ்ச்சியுற் றெதிரில் நின்றே,
''ஏங்கிக்கொண் டிருந்தேன், முத்தப்
எனக்குநீர் முதலில் தந்து
வாங்கிக்கொள் ளுங்கள் பின்பு
வட்டியும் முதலா'' யென்ருள்.

போதலர் போது! போந்த
பொன்வண்டு புகுந்து, போது
மீதலர் மதுவுட் கொண்டு
மெல்லிசை பயிலும் போது!
காதலர் காதல் வெற்றிக்
களிநடம் புரியும் போதிவ்
வோதுலர் கவிஞ ஞெப்பொன்
றுரைத்திடும் போதெப் போது!!

## எமது வெளியீடுகள்

கவிஞன்

நாயகம்

அறிஞன்

தமிழன்

## அடுத்த வெளியீடுகள்

நண்பன்

கவியகம்

பாட்டாளி

துணைவி